Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (16-6-66) இதழ் 129

பராபவ ஆனி 2 ஸபர் 26 வியாழக்கிழமை

## வீதி விளக்குகளில் பல்புகள் திருட்டு!

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண நகரின் வீதிகளில் சமீபத்தில் புதிதாக இணைக்கப்பட்ட 'மெர்க்கியூரி' பல்புகள், ஷேடுகள் ஆகியவற்றைச் சிலர் திருடிச் சென்று விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொட்டடி, சிவன்பண்ணைவீதியில் சீனிவாசகம் வீதி இணையும் சந்தி மற்றும் அரியாலை சந்தி, ஈச்சமட்டை சந்திகளில் இணைக்கப்பட்டிருந்த பல்புகள், ஷேடுகள் ஆகியன திருடப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய மூன்று பல்புகள், ஷேடுகளுடன் களவாடப்பட்டுள்ளனவென்றும் ஒவ்வொன்றும் சுமார் ரூ 300 பெறுமதியானவை என்றும் தெரிகிறது. திட்டமிட்ட திருடர் கோஷ்டி இவற்றைத் திருடிச் சென்றிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. இதுபற்றி பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

# சிங்கள ஆசிரியர் மூலம் ஒற்றுமை காணலாம்

## மகாநாயகதேரோ கூறுகிறார்

கொழும்பு, புதன்


சிங்களவர் தமிழர் ஐக்கியத்தை உருவாக்கவும் தேசிய ஒருமைப்பாட்டைப் பேணவும், வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை நியமிப்பது ஒரு சிறந்த வழி என்று மல்வத்தை மடாதிபதி வண அமுனுகம விபாஸி மகாநாயக தேரோ நேற்று குளியாப்பிட்டியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழ்ப் பகுதி பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை நியமிப்பதற்கு பௌத்த சங்கம் பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் அளிக்கும் என்றும் அவர் கூறினார்.

"தமிழர்கள் தங்கள் சமயத்திலும் மொழியிலும் அளவிலா அன்பும் அபிமானமும் கொண்டிருந்தாலும் பௌத்த சமயத்திலும் சிங்களமொழியிலும் பெரும் மதிப்பும் மரியாதையும் வைத்துள்ளனர் என்றும் மகாநாயகதேரோ கூறினார்.

தாம் யாழ்ப்பாணத்தில் சென்றஇடமெல்லாம் அன்புடன் வரவேற்கப்பட்டதாகவும் இரு சமூகத்தவர்களுக்கிடையிலுமுள்ள நற்புறவு உணர்வை எடுத்துக்காட்டியதாகவும் அவர் கூறினார்.

உணவு விவசாய மந்திரி திரு எம் டி பண்டா, கல்வி மந்திரி திரு ஐ எம் ஆர் ஏ இரியகொல, சமூகசேவா மந்திரி திரு அசோகா [illegible]குணரத்தின ஆகியோரும் இவ்வைபவத்தில் பேசினர்.



ரயில் விபத்து எதிரொலி

## இந்திய ரயில்வே மந்திரி பட்டீல் ராஜினமா முயற்சி!

### ஏற்கமாட்டேன் என்கிறார் பிரதமர் இந்திராகாந்தி

புதுடில்லி. ஜூன் 15

பம்பாயில் நடைபெற்ற மின்சார ரயில் விபத்தைத் தொடர்ந்து, ரயில்வே மந்திரி திரு. எஸ். கே. பட்டீல் தமது ராஜினமாவைச் சமர்ப்பிக்க முன் வந்திருப்பதாயும். ஆனால் தாம் இதை ஏற்கப் போவதில்லை என்றும் பிரதமர் இந்திராகாந்தி நிருபர்கள் மகாநாட்டில் இன்று கூறினர்.

திரு. மொரார்ஜி தேசாயை தமதுமந்திரி சபையில் சேர்த்துக்கொள்ளும் திட்டம் எதுவும் தம்மிடமில்லை என்றும் ஸ்ரீமதி காந்தி, ஒரு கேள்விக்குப் பதிலளித்தபோது குறிப்பிட்டார்.

அடுத்த மாதம் 12-ம்திகதி தாம் ரஷ்யாவுக்கு விஜயம் செய்யப்போவதாயும், 4 அல்லது 5 நாட்கள் அங்கு தங்கக்கூடும் என்றும் ஸ்ரீமதி காந்தி தெரிவித்தார்.

வேறு நாடுகளுக்கு தாம் அச்சமயத்தில் விஜயம் செய்யக்கூடுமா என்பது குறித்து இப்போது நிச்சயமாகச் சொல்வதற்கில்லை என்றும் அவர் கூறினார்.

அடுத்த சில மாதங்கள் இந்தியாவுக்குக் கஷ்டமான நிலைஏற்படும்என்றும் ஸ்ரீமதி காந்தி தெரிவித்தார்.

டில்லியில் நடைபெறவிருக்கும் டிட்டோ, நாஸர், இந்திரா உயர்மகாநாட்டுக்கான நிகழ்ச்சிநிரல் எதுவும் இல்லை என்றும் அவர் கூறினார்.

## கைத்தறித் துணிக்கு விலைக் கட்டுப்பாடு வேண்டாம்

### பிரதமருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், வியா.

உள்ளூரில்உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளைக் கட்டுப்பாட்டு விலைத்திட்டத்தின் கீழ்கொண்டுவருவதால் இத்தொழில் பெரிதும் பாதிக்கப்படுமென்றும், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பலர் வேலையிழக்கவேண்டி நேரிடும் என்றும், இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு இது விஷயத்தில் ஒரு முடிவு செய்யப்படுமுன் தனிப்பட்ட உற்பத்தியாளருடன் கலந்து ஆலோசிக்குமாறு வர்த்தக மந்திரியைப் பணிக்குமாறு வட இலங்கை கைத்தறி நெசவாளர்சங்கம் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி சங்கம் இது சம்பந்தமாகப் பிரதமருக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளதாவது:-

கைத்தறித் துணிகளுக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்க வர்த்தக அமைச்சர் உத்தேசித்துள்ளதாக வெளிவந்த செய்தி குறித்துநாம் மிக்க திகைப்படைத்துள்ளோம்.

பலதரப்பட்ட ரகங்களுக்கு விலை நிர்ணயிப்பது நடைமுறைக்கு அசாத்தியமானது. அரசாங்க நெசவு நிலையங்களில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு இருப்பதுபோல் தனிப்பட்ட நெசவு நிலையங்களின் உற்பத்திப் பொருள்களுக்கும் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டால், தரத்துக்கும், அலங்காரவேலைப்பாடுகளுக்கும் ஏற்ப ஊழியர்களுக்குச்சம்பளம் வழங்கும் நெசவு நிலையங்கள் மூடப்பட வேண்டிய நிர்ப்பந்த நிலை உருவாகும். ஏனெனில் அரசாங்க நெசவு நிலையங்

(5-ம் பக்கம் பார்க்க)

## தியாகிகள் அரங்கில் தொழிலாளர் மாநாடு

### கல்முனை மாநாட்டு நிகழ்ச்சிகள் பூர்த்தி

களுவாஞ்சிக்குடி, புதன்

இம்மாதம் 23-ந் திகதி திகதி தொடக்கம் 25-ந் திகதிவரை கல்முனையில் நடைபெறவிருக்கும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பத்தாவது தேசிய மகாநாட்டுக்கான நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு முடிவடைந்துள்ளன.

தொழிலாளர் மகாநாடு, மாதர் மகாநாடு, இலக்கிய மாநாடு ஆகியவற்றுடன் கலை அரங்கும் இரண்டாவது நாள் நிகழ்ச்சிகளில் இடம்பெறுகின்றன. தொழிலாளர் மகாநாடு நடைபெறும் இடத்துக்கு "தியாகிகள் அரங்கு" என்றும் மாதர் மகாநாடு நடைபெறும் இடத்துக்கு "பாடும் மீன் அரங்கு" என்றும் பெயரிடப்படவிருக்கிறது. மட்டக்களப்பு முதல் எம் பி திரு செ இராசதுரையின் தலைமையில் நடைபெறவிருக்கும்இலக்கியமகாநாடும், பட்டிருப்பு எம் பி திரு எஸ் எம் இராசமாணிக்கத்தின் தலைமையில் நடைபெறவிருக்கும் கலை அரங்கமும், "உமறுப் புலவர் அரங்கில்" நடைபெறும்.

மகாநாட்டின் முதல் நாளான 23-ந் திகதி கட்சியின் மத்திய செயற்குழு, பொதுக் காரியசபை ஆகியவைகளின் கூட்டங்கள் நடைபெறும்.

இரண்டாம் நாள் காலை சைக்கிள் ஊர்வலத்தைத் தொடர்ந்து கட்சிக்கொடி ஏற்றிவைக்கப்படும். இதன் பின் வரவேற்புக் குழுத் தலைவர் ஜனுப் மசூர் மௌலானா வரவேற்புரை நிகழ்த்துவார். வாலிப முன்னணியினரின் அணிவகுப்பின் பின் தலைவர் தமது தலைமைப் பேருரையை நிகழ்த்துவார்.

மூன்றுவது நாளான 25ந் திகதி காலை அரசியல் மகாநாடு நடைபெறும். மாலையில் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுக்கூட்டத்துக்கு பிரதமர் டட்லி சேனநாயகாவும் ராஜாங்க மந்திரி திரு ஜே ஆர் ஜயவர்த்தனவும் மோட்டார் காரில் பவனியாக வந்துசேருவார்கள் அவர்களுக்குப்பொது வரவேற்புரையும் வாசித்தளிக்கப்படவிருப்பதக்கத தெரிகிறது.

## தெல்லிப்பளையில் மந்திரிக்கு வரவேற்பு

### இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், வியா.

ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்துக்கும் செனட்டர் எஸ். நடராசாவுக்கும் இன்று மாலை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி திறந்தவெளியரங்கில் வரவேற்பொன்று அளிக்கப்படவிருக்கிறது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தெல்லிப்பளைக் கிளையினர் ஒழுங்கு செய்த இந்த வரவேற்புக்கூட்டத்தில் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் [illegible] உரை நிகழ்த்துவர்.

## முதல் எதிரிக்கு 10 வருடம் 2-ம் எதிரிக்கு 7 வருடம்

### சுடலை இரட்டைக் கொலை வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

மந்துவில் சுடலையடி இரட்டைக்கொலை வழக்கில் 1-ம் எதிரி கதிரன்நாகமுத்துவுக்கு, 10 வருட கடூழிய சிறைத்தண்டனையும், 2-ம் எதிரி சின்னையா நவரத்தினதிற்கு 7 வருட கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

மயானத்தை யுத்தகளமாக மாற்றியிருக்கிறீர்கள் என்பதை சாட்சியங்களில் இருந்து அறிய முடிகிறது என்றும் இது ஒரு சண்டித்தனமான செயல் என்றும் சர்வசாதாரணமாக கத்தியை பாவிப்பது நிறுத்தப்படவேண்டும் என்றும் நீதியரசர் தீர்ப்பளிக்கும்போது தெரிவித்தார்.

இவ்வழக்கு வடபகுதி அஸைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் எச். டபி யு [illegible]ம்பையா கியூ சி முன்னிலையில் கடந்த மூன்று தினங்கள் விசாரணை செய்யப்பட்டு, நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

தீர்ப்பை அறிவதற்காக நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் பெண்கள் உட்பட பெருந்திரளானோர் காணப்பட்டனர்

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ந் திகதியளவில் மந்துவில் சுடலையடியில் கதிரன் நாகமுத்து, சின்னையா நவரத்தினம் ஆகியோர் கணபதி சுப்பிரமணியத்தை கொலை செய்ததாகவும், அதே இடத்தில் அதே நேரத்தில் அதே சம்பவம் நடக்கும்போது, கந்தன் சித்திரனைக் கொலை செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது

எதிரிகள் சார்பில் அட்வகேட் ஏ. சம்பந்தன், அட்வ

(5-ப் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

ஆசிரியை

ஹரன் நெசவுத் தொழிற் சாலைக்கு வட மாகாணத்திலுள்ள ஏதாவதொரு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நெசவு பயிற்சி பெற்ற, அல்லது, 5 வருட அனுபவமுள்ள ஆசிரியை தேவை. தராதர, நற்சாட்சிப்பத்ரங்களுடன் விண்ணப்பிக்கவும்; ஹரன் நெசவுத் தொழிற்சாலை, அன்னயாளிகை, பிரதான வீதி, காங்கேசன் துறை. 551

### விற்பனைக்கு

காணி

மல்லாகம் ஸ்ரேஷன்ரேட் சந்தியிலிருந்து 100 யார் தூரத்திலுள்ள காக்கிடு தேவன்சீமைஎன்னும் 3 1/2 பரப்பு 2 1/2 குழி உடைய வீடும் வளவும் விற்பனைக்குண்டு. செல்லப்பா இராசையா, ஸ்ரேஷன்ரேட் மல்லாகம். 555

மோட்டார் சைக்கிள்

4ஸ்ரீ 5538 என். எஸ். யு. மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தோலகட்டி முறிவு நோவு வைத்தியரின் இல்லத்திற்கருகாமையில் கே. மகேந்திரன், தோலகட்டி, வசாவிளானில் பார்வையிடலாம். விலைரூபா 1600/- 540

### நன்றி நவிலல்

எமது விவாக வைபவத்தில் பங்குபற்றி எம்மை ஆசீர்வதித்தும், பரிசுகள் வழங்கியும் நன்றி தெரிவித்த உறிமுர் நண்பர்கள்எல்லோருக்கும் உளம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். தனித்தனி நன்றி தெரிவிக்க இயலாமையையிட்டுமனம் வருந்துகிறோம். பத்மநாதன் - காந்தபூபதி. ''பதிவாசா'', இல.8, முருகேசு லேன், நல்லூர். 558

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## சம்பந்தர் குருபூசை

கிளிநொச்சி, திங்கள்

ஜெயந்திநகர் சம்பந்தர் திருக்கூட்டத்தினரால் ஜெயந்திநகர் ஸ்ரீ மீனுட்சி அம்பாள் ஆலயத்தில் திருஞானசம்பந்தர் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சுவாமிகளின் உருவப்படத்தை ஊர்வலமாகப் பிரார்த்தனையுடன்கொண்டு வந்து ஆலயத்தில் வைத்து விஷேச பூஜையும் ஆராதனையும் நடைபெற்றன.

## 'சிறிய முதலாளிகளை தாக்கவிரும்பவில்லை'

அக்குறனை, புதன்

'தற்பொழுது நாங்கள் துணிவிநியோகத்தில் கவனம் செலுத்தி வருகிறோம், அத்துடன் அத்தியாவசியப் பொருட்கள் எல்லாவற்றிற்கும் தற்பொழுது பதுக்கி வைக்கப்பட்டிருக்கும்பொருட்களுக்கும் கட்டுப்பாட்டு விலை கொண்டுவர உத்தேசித்துள்ளோம்' என்று சுகாதாரமந்திரி திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன உடுநுவர தொகுதியில் மருத்துவமனையொன்றிற்கு அத்திவாரக்கல் நாட்டி பேசும்போது குறிப்பிட்டார்,

அவர் தொடர்ந்து பேசும்பொழுது குறிப்பிட்டதாவது:—

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபொழுது பல பிரச்னைகள் இருந்தன. துணிக்கட்டுப்பாட்டுவிலையினுல் அரசாங்கம் சின்ன முதலாளிகளின் வருமானத்தை தாக்கவிரும்பவில்லை. நீதியற்ற முறையில் கொள்ளையடிக்கும் பெரும் புள்ளிகளையே நாம் கட்டுப்பாடு செய்ய விரும்பினேம்.

## கப்பல் மூழ்குகிறது

லண்டன் ஜூன் 15

4,000 டன் கொண்ட பெரிய நார்வே வர்த்தகக் கப்பல்ஒன்று மூழ்கிக்கொண்டிருப்பதாயும், மாலுமிகள் கப்பலைக் கைவிட்டு வெளியேறிவிட்டார்களென்றும் தகவல்கள் கிடைத்துள்ளது.




## கொழும்பு

### வியாழன் 16 - 6 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல் வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

844 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

844 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 இசை மெட்டு.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 தமிழோடிசை பாடல், 7-00 பேச்சு. 7-15 தாளவாத்தியக்கச்சேரி, 7-45 நாடகம், 8-00முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வீணை- எஸ். பாலசந்தர், 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

## ரூ 9000க் காரைசெய்தார்

சென்னை. ஜூன் 15

ஒரு மோட்டார் என்ஜினியரான திரு. கே ஏ. பாலகிருஷ்ண மேனன் உள்நாட்டு உற்பத்தி சாதனங்களைக் கொண்டு புதிய கார் ஒன்றைச்செய்து முடித்திருக்கிறார்.

10 குதிரை சக்திகொண்ட என்ஜினும், 5பேர்வசதியாக பிரயாணம் செய்ய ஆசனங்களும் இதில் பொருத்தப்பட்டுள்ளன. 'அரவிந்த்' எனப் பெயரிடப்பட்டுள்ள இக்காரின் விலைரூபா 9000க்கும் குறைவாகும்.

மூன்று ரகமான கார்களை தாம் உற்பத்திசெய்யத்திட்டமிட்டிருப்பதாயும், இதில் 6000ரூபா பெறுமதியான மத்திய ரக கார் ஒன்றும் அடங்கும் என்றும் அவர் கூறினர்.

**வேடிக்கை**

## 3அடிக்குள் 2 தபால் பெட்டிகள்

துணுக்காய், புதன்

துணுக்காய் கிராமசபைக் காரியாலயத்துக்கு முன்னுல் 6 மாத காலமாக இரு தபால் பெட்டிகள் 3 அடி தூரத்தில் இருக்கின்றன. பொதுமக்கள் இரண்டு தபால்பெட்டிகளுக்குள்ளும் தபால்களைப்போடுகின்றனர். இந்த இரண்டு தபால்பெட்டிகளில் ஒன்று தான் நாளாந்தம் திறக்கப்படுகிறது மற்றயது கவனிப்பாரற்று கிடக்கிறது.

ஆனுல் துணுக்காய்ப்பகுதியில் தபால்பெட்டி வைக்கப்படவேண்டிய வேறு பலபகுதிகளில் தபால் பெட்டி இல்லாமல் துணுக்காயில் குறித்த இடத்தில் மூன்றடிக்குள் இரண்டு பெட்டிகளும் அதிலிருந்து 150யார் தூரத்திலிருக்கும் உபதபாற்கந்தோரில் ஒரு பெட்டியுமாக வைக்கப்பட்டிருக்கிறது.

பொதுமக்கள் இதுசம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையிட்டும் எதுவித பலனும் இல்லையெனத் தெரியவருகிறது. ——

## விவசாயிகள் கழக கூட்டம்

கோண்டாவில், புதன்

இணுவில் தேசிய விவசாயிகள் கழகத்தின் மாதாந்தக் கூட்டம் திரு. இலகுநாதன் தலைமையில் நடைபெற்றது. இணுவில் சைவ மகாஜன கல்லூரி மண்டபத்தில் பம்பாய் வெண்காயம், உருளைக் கிழங்கு, குரக்கன் தினை, ஆகிய உபஉணவுப் பயிர்களை இம்முறை அதிகமாக உற்பத்தி செய்வதென்றும், சிறந்த முறையில் பெருந்தொகையில் உற்பத்திசெய்யும் விவசாயிகளுக்கு பரிசில்கள் வழங்கி ஊக்குவிப்பதென்றும், விவசாயிகளுக்கு வேண்டப்படும் உரம், மருந்துவகைளை இறக்குமதி செய்து தரவேண்டுமென அரசாங்கத்திடம் நேரடியாகக் கேட்டுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. திருவாளர்கள்: இ. பொன்னம்பலம், ம. பரமநாதன் ஆகியோரும் பேசினர். ——

## விளையாட்டுக்கழக சம்மேளனம்

மாவிட்டபுரம், புதன்

வலிகாமம் வடக்கிலுள்ள விளையாட்டுக் கழகங்கள் அனைத்தையும் ஒன்றுபடுத்தி வலி-வடக்கு விளையாட்டுக் கழக சம்மேளனம் ஒன்றினை அமைப்பதற்கானபூர்வாங்க நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இதற்கான சட்டதிட்டங்களையும் செயல்முறைத் திட்டங்களையும் உருவாக்ககாரியாதிகாரி திரு டி. முருகேசம்பிள்ளை, திரு. வி. சண்முகராசா ஆகியோரைக்கொண்ட சபை அமைக்கப்பட்டது.


## இலங்கைத் தமிழரசுக் கட்சி கல்முனை மாநாட்டு பஸ் சேவை

10-வது மாநில மாநாட்டிற்கு யாழ்ப்பாணத்திலிருந்து செல்லவிரும்பும் அன்பர்களின் வசதிக்காக விசேட பஸ்கள் ஏற்பாடுசெய்யப்படுகின்றன. 2^-6-66 காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் கட்சிக்காரியாலயத்திலிருந்து புறப்பட்டு 26-6-66 இரவு யாழ்ப்பாணம் திரும்ப ஒருவருக்குச் செலவு ரூபா 25/- மட்டுமே.

சேரவிரும்புவோர் 25, 2-ம் குறுக்குவீதி, யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிக் காரியாலயத்தில் 19 - 6 - 66க்கு முன்பு பணத்தைச் செலுத்தி பதிந்து கொள்ளவும். 602


## விளம்பரம்

கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

17-ம் பிரிவின்மடியான அறிவித்தல்

என் 1338- 1961 இல் 6ும் இலக்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம். 257) 17 (5) ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரப் பலத்தைக்கொண்டு, உள்ளூராட்சி உதவி அதிகாரி, வடபிரதேசம் (மேல்), யாழ்ப்பாணம், சிவசுப்பிரமணியம், சின்மயானந்தகுரு மாணிக்கவசாதர் ஆகிய நான் இதன் அட்டவணையின் பத்தி Iல் குறிக்கப்பட்டுள்ள கிராமச்சபைகளின் கூட்டங்களை அந்த அட்டவணைப் பத்தி IIல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அந்த அட்டவணைன் பத்தி IIIல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையின் பத்தி IVல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் காட்டுகிறேன்.

சிட சி. மாணிக்கவாசகர்,-
உள்ளூராட்சி உதவி அதிகாரி
வட பிரதேசம் (மேல்).

உள்ளூராட்சிக் கந்தோர்,
யாழ்ப்பாணம்.
1966ம் ஆனி 7ம் திகதி.

அட்டவணை

| பத்தி I. | பத்தி II. | பத்தி III. | பத்தி IV. |
|---|---|---|---|
| கிராமச்சபையின் பெயர் | திகதி | நேரம் | இடம் |
| சுழிபுரம் | 23-6-66 | 9-30 மு. ப. | கிராம சபை அலுவலகம் |
| புலோலி. | 23-6-66 | 11-30 மு. ப. | கிராமசபை அலுவலகம். |
| முகமாலை. | 23-6-66 | 3-30 பி. ப. | கிராமசபை அலுவலகம் |

3118

## முல்லைத்தீவுப் பட்டண சபை கேள்வி விளம்பரம்

1. 1966-ம் ஆண்டு ஆனி மாதம் 26-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணி வரையும் முல்லைத்தீவுப் பட்டண சபைத் தலைவரால் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான சீல் வைத்த கேள்விகள் இரு பிரதிகளில் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள் பட்டண சபை அலுவலகத்தில் அதற்கென அமைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் போடப்படவேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் முல்லைத்தீவுப் பட்டண சபைத் தலைவருக்கு அனுப்பப்படல்வேண்டும். கேள்வியைக்கொண்ட காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் எந்த வேலைக்குரிய கேள்விகள் சமர்ப்பிக்கப்படுகிறதென எழுதப்படல்வேண்டும்.

3. கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்ட பிரகாரம் கேள்விப்பத்திர வைப்புப் பணம் கட்டியதன் பின் பட்டண சபைத் தலைவரால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான கேள்விப் பத்திரங்களில் மாத்திரம் கேள்விகள் தயாரிக்கப்படல்வேண்டும். கேள்விப் பத்திர வைப்புப் பணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டுகள் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

4. கேள்விகளிலுள்ள மாற்றங்கள், அழித்தல்கள் யாவும் கேள்வி வண்ணப்பக்காரரினுல் முதலெழுத்து ஒப்பம் போட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

5. ஒருவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்ட ஒரு வாரத்துக்குள் பட்டண சபைத் தலைவருடன் அதற்காகிய கேள்வியின் 10வீதத்தை பிணைப் பணமாகக் கட்டி ஒப்பந்தம் செய்துகொண்டு வேலையை ஆரம்பிக்கத்தவறும் எவருக்கும் வேலைக்கு கட்டிய வைப்புப் பணம் திருப்பிக்கொடுபடமாட்டாது. ஒப்பந்தப்படி வேலைகள் யாவும் செய்துகொடுத்து சபையால் பாரமெடுக்கப்பட்ட பின்புதான் கட்டிய பிணைப்பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

6. கேள்விக்காரரை முடிவாகத் தெரிவு செய்வதற்கும் காரணம் காட்டாமல் எந்த அல்லது எல்லாக்கேள்விகளையும் நிராகரிக்கும் உரிமையும், ஒரு கேள்வியின் எந்தப்பகுதியையும் ஏற்கும் உரிமையும் பட்டண சபைத் தலைவருக்கு மாத்திரம் உண்டு.

7. கேள்விப் பத்திரங்கள் இம்மாதம் 24-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிவரை மாத்திரம் பட்டண சபை அலுவலகத்தில் மேற்ப்போந்த நிபந்தனைகளுக்கிணங்க வழங்கப்படும்.

8. ஒவ்வொரு வேலைக்கும் கேள்விப் பத்திரப்பணமாக ரூபா 5-00 இக்காரியாலயத்தில் செலுத்தப்படல் வேண்டும். இப்பணம் எக்காரணம் கொண்டும் திருப்பிக் கொடுபடமாட்டாது.

9. வேலைக்கு வேண்டிய திட்டப்படங்கள், விபரங்கள் யாவும் பட்டண சபைக் காரியாலயத்தில் வேலை நேரங்களில் பெற்றுப் பரிசீலனை செய்துகொள்ளலாம்.

10. மேற்கூறிய நிபந்தனைகளுக்கு அமையாத, பிந்திய கேள்விகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

11. தலைவருடைய அனுமதியின்றி, எடுக்கப்பட்ட வேலை ஒப்பந்தத்தை இன்னெருவருக்குக் கொடுக்கவோ அல்லது பங்கு போடவோ கொந்திருத்துக்காரனுக்கு உரிமைகிடையாது.

12. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விவிண்ணப்பகாரன் சபையுடன் மேலே கூறப்பட்ட 5-ம் நிபந்தனையின் பிரகாரம் ஒப்பந்தம் செய்துகொண்டபின்பு தான் கேள்விக்காரன் செலுத்திய வைப்புப்பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

அட்டவணை

| வேலைகளின் பெயர் | வைப்புப்பணம் |
|---|---|
| 1. சென்ற் மேறிஸ் ரோட்டுத் திருத்த வேலை | ரூபா 25-00 |
| 2. பட்டண சபைக் கிறவல் ரோட்டுகள் திருத்த வேலை | ,, 25-00 |
| 3. நகரசுத்தி வாகனங்கள் பாதுகாக்கும் கொட்டில் அமைத்தல் | ,, 25-00 |
| 4. இன்னுறு ஒழுங்கைக்கு ரோட்டுப் போடுதல் | ,, 25-00 |

அ. சந்தியாப்பிள்ளை
தலைவர்,
பட்டணசபை
முல்லைத்தீவு.

பட்டண சபைக் காரியாலயம்,
முல்லைத்தீவு,
12-6-1966

601

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராப் பிரச்சினைகள் அனைத்திலும் பொது உடன்பாடு

## ஜாகர்த்தாவில் இந்தோனேஷிய மலேஸிய பேச்சு முடிவு

ஜாகர்த்தா, ஜூன் 15

இந்தோனேஷியாவுக்கும் மலேஸியாவுக்குமிடையேயான தீராத எல்லாப் பிரச்னைகளிலும் பொது உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக ஜாகர்த்தா ரேடியோ அறிவித்திருக்கிறது.

மலேஸிய அதிகாரிகளுக்கும், இந்தோனேஷியத்தலைவர்களுக்குமிடையே ஜாகர்த்தாவில்நடைபெற்றபேச்சுகளின் விளைவாக இந்த உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது.

பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு மலேஸிய தூதுகோஷ்டி கோலாம்பூர் திரும்பியது.

மலேஸிய தூதுகோஷ்டி ஜாகர்த்தாவில் ஜெனரல் சுகர்ட்டோ, வெளிநாட்டு மந்திரி டாக்டர் மாலிக் ஆகியோருடன் பேச்சு நடத்தியது.

தற்போதைய இந்தோனேஷியத் தலைவர்கள் உண்மையில்சமாதானத்தில் நாட்டம் கொண்டிருப்பதைத் தாங்கள் அறிந்ததாயும், இதே தலைவர்கள் தொடர்ந்து பதவியில் இருந்தால் தென்கிழக்காசியாவின்பாதுகாப்பு உறுதிப்பட்டுவிடும் என்றும் மலேஸிய தூதுகோஷ்டித் தலைவர் கூறினார்.

மலேஸியாவுடனான தகராறை துரிதமாகத் தீர்த்து அமைதியை ஏற்படுத்த புதிய இந்தோனேஸியத் தலைவர்கள் விரும்புவதாயும் அவர் கூறினார்.

நேற்று ஜாகர்த்தாவில் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டஒரு பேரணி வகுப்பு நடைபெற்றது.

அணிவகுப்பினர் சார்பாக தூதுகோஷ்டி ஒன்று ஜனாதிபதி சுகர்னோவைச்சந்தித்து மூன்றாண்டுகளாக நிலவும் மலேஸிய எதிர்ப்புக் கொள்கையை முடிவுக்குக்கொண்டு வருமாறு கேட்டுக்கொண்டது.

மலேஸியாவுடன் சமாதானம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தும் சுவரொட்டிகள் வீதிகள் எங்கும் காட்சியளிக்கின்றன.

## 'அணு ஆயுதப்பரவலைத் தடுக்கும் ஒப்பந்தம் சாத்தியமில்லை'

### அமெரிக்காவே காரணம் என ரஷ்யா கண்டனம்

ஜெனிவா, ஜூன் 15

அமெரிக்கா வியட்னாமில் இப்போதைய கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றும் வரை அணு ஆயுத பரவலைத் தடுக்கும் ஒப்பந்தம் எதுவும் சாத்தியமில்லை என ஜெனிவா ஆயுதப் பரிகரண மகாநாட்டில் ரஷ்யா அறிவித்தது.

வியட்னாமில் மீண்டும்மீண்டும் அமெரிக்கா ஆக்கிரமிப்பு நடத்திவருவதும், மேற்கு ஜெர்மனியின் ராணுவ வெறிக்கொள்கையுமே இதற்கான காரணம் என சோவியத் பிரதிநிதி தெரிவித்திருந்தார். நிற்க.

சென்றவார சண்டையில் 470 வட வியட்னாமியரை தாங்கள்கொன்றதாக அமெரிக்க அதிகாரிகள் கூறினர். வடவியட்னாமுக்கு உயரே இனம் தெரியாத விமானம் ஒன்றை வானத்தில் தாங்கள் சுட்டு வீழ்த்தியதாயும், மற்றோர் இனம்தெரியாத விமானம் தப்பி ஓடிவிட்டது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

டானங்கில் இன்று நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குகள் உண்ணாவிரதம்மேற்கொண்டிருக்கிறார்கள்.

சைகோனில் நேற்று ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிசாருக்குமிடையே கைகலப்புக்கள் நடைபெற்றன.

## "இலங்கைத் தேயிலையுடன் நன்றாகப் போட்டியிடலாம்"

### ரூபாய் மதிப்பு குறைவு பற்றி இந்திய உற்பத்தியாளர்

டார்ஜிலிங், ஜூன்15

ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டதனால், பிரிட்டனுக்கு மட்டுமின்றி, அமெரிக்காவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் கூட இந்தியத் தேயிலையின் ஏற்றுமதி அதிகரிக்கும்என பிரபல தேயிலை உற்பத்தியாளரான திரு. பி. ஸி. கோஷ் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளாக உலக மார்க்கெட்டில் இலங்கைத் தேயிலை போட்டியிட்டுவந்தபோதிலும், புதிய நடவடிக்கை மூலம் சாதகமான பலன் ஏற்படும் என்றும் அவர் கூறினார்

கிலோகிராம் ஒன்றுக்கு 2 ரூபாய் ஏற்றுமதி வரி விதிக்கப்பட்டிருப்பது உள்நாட்டு விலையை அப்படியே பராமரித்தால் ஏற்றுமதியைப் பாதிக்காது என்றும் திரு. கோஷ் கூறினார்.

ஆண்டு ஒன்றுக்கு டார்ஜிலிங் தேயிலையை ரஷ்யா ஒன்றரைக்கோடி ராத்தல் இறக்குமதி செய்கிறதென்றும், ஏற்றுமதி வரி பாதிக்காததால் ரஷ்யா இன்னும் நிச்சயமான மார்க்கெட்டாய் இருந்துவருகிறதென்றும் அவர் கூறினார்.

டார்ஜிலிங் உற்பத்தியில் முக்கால்வாசி தேயிலையை ரஷ்யா இறக்குமதி செய்கிறது.

''ரூபாய் மதிப்பு இறக்கப்பட்டதால், இந்தியத் தேயிலையின் சுபீட்சத்துக்கு உத்தரவாதம் ஏற்பட்டிருப்பதுடன் தேயிலையின் அளவை உயர்த்தவும், அதிகவேலை வாய்ப்பை அளிக்கவும் அது புதுவழி செய்திருக்கிறது'' என்றார் அவர். (பி. டி. ஐ)

## ஆம்ஸ்டர்டாமில் ஆர்ப்பாட்டம்

ஆம்ஸ்டர்டாம், ஜூன் 15

ஹாலந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் நேற்று 5000 ஆர்ப்பாட்டக்காரர்கள் கலவரத்தில் இறங்கியதால் 57 சிவிலியன்களும், 12 பொலிசாரும் காயமடைந்தனர். ஆர்ப்பாட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆலைத்தொழிலாளி ஒருவர் ஆர்ப்பாட்டத்தின்போது, பொலிசாரின் துப்பாக்கிக்கு இரையானதைத் தொடர்ந்து புதிய ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. வாகனங்களுக்குத் தீமூட்டப்பட்டது. கட்டிட ஜன்னல்கள் கற்களால்நொறுக்கப்பட்டன.

## பிரமிட்டுக்கு 'எக்ஸ் ரே

கெய்ரோ ஜூன் 15

கண்டுபிடிக்கப்படாத கல்லறைகள் இன்னும் இருக்கின்றனவா என்பதை அறிய எகிப்திய பிரமிட்டுகள்மீது 'எக்ஸ்ரே' பிரயோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது 18 மாதங்கள் இந்த ஆராய்ச்சி நடத்தப்படும்

அமெரிக்காவுக்கும் ஐக்கிய அராபியக் குடியரசுக்குமிடையே கைச்சாத்தான உடன்படிக்கைமூலம் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சாதனங்களையும், ஆராய்ச்சிகளையும் அமெரிக்கா மேற்கொள்ளும். 'பிரமிட்' கோபுரம் உலக அதிசயங்களில் ஒன்றாகும்.

## ரயில்வண்டி தீப்பிடித்தது

புதுடில்லி ஜூன் 15

கடந்த திங்கட்கிழமைவடகிழக்கு எல்லைப்பகுதியில் ஒருசாமான் ரயில் வண்டியிலுள்ள, பெட்ரோல் டாங்கி திடீரெனத் தீப்பிடித்து வெடித்தது. இதனுடன் இணைக்கப்பட்டிருந்த மற்றும் 7 பெட்ரோல் டாங்கிகளும் வெடித்து, எல்லாம் தடம்புரண்டதாக அறிவிக்கப்படுகிறது. விபத்துபற்றி ஆராயப்படுகிறது.

## ராஷ்டிரபதி கோரிக்கை

புதுடில்லி, ஜூன் 15

சட்டசபையைக்கலைக்காமல் ஒரு ராஜ்யத்தில் ராஷ்டிரபதி ஆட்சியை அமுலுக்குக் கொண்டுவர முடியுமா என்பதுபற்றி கருத்துதெரிவிக்குமாறு அட்டோர்ணி ஜெனரல் கோரப்பட்டிருக்கிறார். பஞ்சாபி சுபாவிஷயமாக இவ்வாறு கோரப்பட்டுள்ளதாம்.

## கென்யாவில் கென்னடி

நைரோபி ஜூன் 15

கென்யா வந்து சேர்ந்த செனட்டர் கென்னடிக்கு பெரும்வரவேற்பளிக்கப்பட்டது. ஜனாதிபதி கென்யாட்டாவை திரு கென்னடி சந்தித்தார். தென்னாபிரிக்காவில் திரு. கென்னடி நிகழ்த்திய இனசமத்துவ சொற்பொழிவுகளை திரு கென்யாட்டா அப்போது பாராட்டினார்.

## ஏடனுக்கு ஐ.நா குழு

கெய்ரோ ஜூன் 15

ஏடன் நிலையை ஆராயகுழு ஒன்றை அமைக்கவேண்டும் என இந்தியாவும், 9 மண்டல சார்பற்ற நாடுகளும் காலனி ஆதிக்கம் சம்பந்த [illegible] கேட்டுக்கொண்[illegible] றன.

# 'தமிழ்நாடு தெய்வீக பேரவை' நிறுவனம்

## தருமபுரம் ஆதினகர்த்தர் தலைவராக தெரிவு

சென்னை, ஜூன்15

இங்கு நடைபெறும் தமிழ்நாட்டு மடாதிபதிகளின்கூட்டத்தில் 'தமிழ்நாடு தெய்வீகப்பேரவை' என்ற பெயரில் ஸ்தாபனமொன்றை அமைப்பதென முடிவு செய்யப்பட்டது.

பேரவையின் அமைப்பு விதிகள் அங்கீகரிக்கப்பட்டன. ஓராண்டு காலத்துக்கு தருமபுரம் ஆதீனகர்த்தர் இதற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அறநிலையக்கமிஷனர் அதன் உபதலைவர்.

தெய்வீகபேரவை மூலம் ஆங்காங்கே கமிட்டிகளை நிறுவி, ஒவ்வொரு கிராமத்திலும்தெய்வவழிபாட்டுக்கு வகை செய்யவும், சிறிய பண்பாடுகளை மக்களுக்கு எடுத்துரைக்கவும்தீர்மானிக்கப்பட்டது. பொதுமக்களின் நன்கொடைகளை ஏற்கவிருக்கும் இந்த அவைக்கு மடாதிபதிகள் தங்கள் வருமானத்தில் 3 சத விகிதத்தைக் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள்.

காஞ்சி, தருமபுரம், திருப்பனந்தாள், குன்றக்குடி, மதுரை, மயிலம் கோவை, பேரூர், திருவண்ணாமலை, ஈசானியமடம், தொண்டைமண்டலம், மைசூர்' உடுப்பி திருக்குறுங்குடி ஆகியவற்றின் மடாதிபதிகளுட்படப் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திருச்சி தி. மு. க. மகாநாடு

## காங்கிரசை பதவியிலிருந்து இறக்கியே தீருவோம்!

### காமராஜின் ''தேர்தல மந்திரம்' பற்றி அண்ணாதுரை

திருச்சி, ஜூன் 15

''ஜனநாயகத்தைச் சிதைக்கும் சர்வாதிகாரப்போக்குள்ள காங்கிரஸ் அரசாங்கத்தை வரும் பொதுத் தேர்தலில் தோற்கடித்துப் பதவியிலிருந்து இறக்காவிட்டால் மக்களுக்கு கதிமோட்சமேஇல்லை'' என திமுக தலைவர் திரு. ஸி. என். அண்ணாதுரை திருச்சி மகாநாட்டில் பேசியபோது குறிப்பிட்டார்.

''மூன்று தலைமுறைகளுக்கு மக்களைக் கடனாளியாக்கியுள்ளது காங்கிரஸ் அரசாங்கம். அதை அகற்றவேண்டும்'' என்றும் அவர் கூறினார்.

''நமது முக்கியமான சத்துருவாகிய காங்கிரசை முறியடிப்பதற்கு தேர்தலில் கூட்டு சேர்வதில் தவறு இல்லை. 1962 தேர்தலில் சென்னை ராஜ்யத்தில் காங்கிரசுக்கு மொத்தம் 50 லட்சம் வாக்குகளே கிடைத்தன. எதிர்கட்சிகள் துண்டுபட்டதால்தான் காங்கிரஸ் அதிகாரத்தைப் பெற்றது. அப்போது திமுகவுக்கும், முஸ்லிம் லீக்குக்குமிடையே தான் கூட்டு ஏற்பட்டது இதர எதிர்க்கட்சிகளுடன்தேர்தல் உடன்பாடு செய்துகொள்ள முடியவில்லை. ஆனல் இந்தத் தடவை இது சாத்தியம் என நம்புகிறேன். இதனால்தான் காமராஜர்பயமடைந்திருக்கிறார் இடைவிடமல் தேர்தல் கூட்டத்தைத் தாக்கி வருகிறார்'' என்றும் அண்ணாதுரை கூறினார்.

''பொட்டி ஸ்ரீராமுலு உயிர்த்தியாகம் செய்தபின் தனி ஆந்திரராஜ்யம் அமைக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. சின்னச்சாமி, சிவலிங்கம், கீரனூர்முத்து போன்றோர் தமிழுக்காக உயிர்த்தியாகம் செய்தனர். இத்தியாகத்தை திமுக அங்கீகரிக்கவில்லை. எனினும் அவர்கள் தியாகம்செய்தார்கள். தமிழ்நாட்டில் இப்போராட்டத்தில் 50 பேர் இறந்ததாக முதல் மந்திரியே ஒப்புக்கொண்டார். இருந்தும் அரசாங்கம் பிடிவாதமாய் இருக்கிறது நீதி வழங்கவில்லை'' என்றார் திரு அண்ணாதுரை.

''ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டதுபற்றி திரு. காமராஜ் ஒருவரே அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. இதற்குக்காரணம் என்ன? தேர்தலைத்தவிர காமராஜருக்கு எந்தவிஷயத்திலும்சிரத்தை இல்லை. காமராஜ் ஒரு தேர்தல் மந்திரவாதி. இந்தியாவில் எந்தந் தலைவருக்கும் காமராஜரைப்போல் அவ்வளவு அபாரமான அறிவு கிடையாது எனவே தி. மு. க எதிர்க்கட்சிகளின் உண்மையான பலம் காமராஜருக்குத்தெரியும்'' என்றும் அண்ணாதுரை குறிப்பிட்டார்.

## நிக்ருமா பதவியிலிருந்து வீழ்த்தப்பட்டதேன்?

### புதிய ஆட்சியினர் விளக்கம்

அபிட்ஜான் (ஐவரிகோஸ்ட்) ஜூன்14

தன்னை பதவியிலிருந்து வீழ்த்திய தேசிய விடுதலை சபை, கொஞ்ச நாட்கள் தான் பதவியில் இருக்கும் என முன்னாள் கானா ஜனாதிபதி டாக்டர் நிக்ருமா கினியிலிருந்து நிகழ்த்திய ஒரு ஒலிபரப்பில் குறிப்பிட்டார்.

கானாவின் புதிய ஆட்சியாளர்கள் காலனி எஜமானர்களிடமிருந்து உத்தரவு பெற்றுவருகிறார்கள்என்றும் சோஷலிஸ அபிவிருத்தியை நசுக்குவதே இதன் நோக்கமென்றும் மேலும் அவர் கூறினார்.

இதற்கிடையில் நிக்ருமாவைப் பதவியிலிருந்து வீழ்த்தியதற்கான காரணங்களை தேசிய விடுதலைசபை அறிவித்திருக்கிறது.

ஜனத்தொகையில் பாதியைக் கொண்ட சுமார் 30 லட்சம் கல்வியறிவற்ற கானா மக்கள் நாட்டின் மோசமான வறுமைநிலை பற்றி அறிந்திருந்தார்களென்றும், உயரிடத்தில் ஊழல்கள், விசாரணையின்றி கைதுகள் ஆகியன இடம் பெற்றிருந்தன என்றும் அது கூறியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி நிக்ருமா நாட்டை வறுமையிலும். பஞ்சத்திலும் ஆழ்த்தும் நிலைமைக்கு கொண்டுவந்துவிட்டாரென தற்போதைய புரட்சித்தலைவர் ஜெனரல் அல்க்ரா கூறினார்.

1957-ம் ஆண்டுசுதந்திரம் கிடைத்தபோது பிரிட்டன்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நல்ல எண்ணம்தான் புண்ணியம் தீய எண்ணங்கள்தான் பாபங்கள். காலை, மாலை வேளைகளில் மௌனம், தியானம் ஆகியவைகளைச் செய்து நம் கஷ்டங்களைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

காஞ்சி ஆச்சாரியாள்

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

யாழ்ப்பாணம் பராபவ ஆனி ௴ 2௳ (16-6-66)

# ஜவுளியும் கூ. மொ. வி.யும்!

ஜவுளி இறக்குமதி செய்யும் பொறுப்பை ஏற்று நடத்தக்கூடிய நிலையில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் இல்லை என்று கூ. மொ. வி. ஸ்தாபனத்தின் பதில் தலைவர் திரு. டி. ஸி. விஜயசேகரா இலாபப் பங்கீடு விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்கையில் தெரிவித்திருக்கிறார். உண்மையை ஒளிவுமறைவின்றி அவர் சொல்லியிருக்கிறார். இது வர்த்தக அமைச்சினதும் அரசாங்கத்தினதும் கவனத்தை ஈர்க்க வேண்டும்.

கூ. மொ. வி. ஸ்தாபனம் இன்றுள்ள நிலையில் வேறு புதிய பொறுப்பு ஏற்கக் கூடியதாக இல்லை என்று திரு. விஜயசேகர தெரிவித்திருக்கிறார். இந்த ஸ்தாபனத்திடம் முன்னர் பல பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டதும் அதன் விளைவாக அதில் ஊழல்கள் மலிந்ததும் அனைவரும் அறிந்த விஷயம். திரு. விஜயசேகராவின் கருத்தைக் கவனிக்கையில இந்த ஸ்தாபனம் இன்னும் சரியான முறையில் செயல்படத் தொடங்கவில்லையென்றே தோன்றுகிறது. இந்நிலையில் ஜவுளிகளை இறக்குமதி செய்யும் ஏகபோக உரிமையை அதற்கு அளிப்பது சரியான செயல்தானா?

கொள்ளை லாபம் அடிக்கும் தனிப்பட்ட வர்த்தகர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். வாழ்க்கைச் செலவு உயர்வைத் தடுப்பதற்கு பதிலாக அதை அதிகரிக்கச் செய்பவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். வாழ்க்கைச் செலவைக் குறைக்க அரசாங்கம் எடுக்கும் சகல நடவடிக்கைகளையும் மீறுவோர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் தனியார் துறையினருக்குச் சந்தர்ப்பம் அளித்தும் அதை அவர்கள் துஷ்பிரயோகம் செய்ததினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதும் அவசியம்தான். ஆனால் இது விஷயத்தில் சரியான திட்டம் எதுவுமின்றி அவசரப்பட்டு நடவடிக்கை எடுப்பது ''உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன்'' என்பது போலாகிவிடும்.

கூ. மொ. வி. ஸ்தாபனமே ஒழுங்கான முறையில் செயல்படவில்லை; அதில் நிறைந்த ஊழல் நீக்கப்படவில்லை; அதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவில்லை; அதுபற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட குழு இன்னும் தனது அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை; இதற்குள் அதனிடம் மேலும் பல பொறுப்புக்களை ஒப்படைப்பது சரியாகாது.

அரசாங்கமும் வர்த்தக அமைச்சும் ஜவுளி விலைக் கட்டுப்பாட்டுத் திட்டம் பற்றியும் அதைச் சரியான முறையில் அமுல் நடத்துவதுபற்றியும் ஆற அமரச் சிந்தித்து இதுவரை இத்திட்டம் எந்த அளவுக்கு வெற்றியளித்துள்ளது என்பதுபற்றி ஆலோசனை செய்து சரியான ஒரு செயல்திட்டத்தை வகுக்க வேண்டும். அவசரப்பட்டு கூ. மொ. வி. ஸ்தாபனத்திடம் எல்லாப் பொறுப்பையும் ஒப்படைப்பது அரசாங்கத்துக்கு மட்டுமல்ல பொது மக்களுக்குமே வீண் கஷ்டங்களை ஏற்படுத்தும்.

## வேலைநிறுத்த நிலைமை

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பித்துள்ள தோட்டத்தொழிலாளர் வேலைநிறுத்தமும் ஜவுளி ஆலை ஊழியரின் வேலைநிறுத்தமும், நீடிக்கிறது. நஷனல் அன் கிறின்லேஸ் வங்கி ஊழியரின் வேலை நிறுத்தமும் இன்னும் முடிவடையவில்லை. இச் சமயத்தில் இந்த வேலைநிறுத்தங்களுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாகவும் புதிய கோரிக்கைகளை முன்வைத்தும் மற்றும்சிலர் ''அரசியல் நோக்கம்'' காரணமாக வேலைநிறுத்தங்கள் மேற்கொள்ளமுயற்சி செய்துவருவதாகச் செய்திகள் கூறுகின்றன. வேலைநிறுத்தங்களையும் தொழிற் சங்கங்களையும் தொழிலாளரையும் அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்துவது லங்கைக்குப் புதிய விஷயமல்ல.

இதைப்பற்றி சிலதினங்களுக்கு முன் இங்கு சுட்டிக் காட்டியிருந்தோம். தோட்டத் தொழிலாளரின் விசேஷ பஞ்சப்படிக் கோரிக்கை நியாயமற்றதென்று கூறமுடியாது. இதேபோல் வேலைநிறுத்தம்செய்யும் இதர தொழிலாளரின் கோரிக்கைகளும் நியாயமற்றவையெனக் கூறமுடியாது. வேலைநிறுத்தங்கள் முதலாளிமாரையோ, அரசாங்கத்தையோ மட்டுமல்லாது வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாரையும் அவர்களதுகுடும்பங்களையுமே பெரிதும் பாதிக்கும். இருந்தும் அவர்கள் வேலைநிறுத்தம் செய்வதானால் அவர்களுக்குக் குறைகள் உண்டு என்பதை உணரவேண்டும். இயன்றவரையில் அவர்களது குறைகளைத் தீர்க்க முயற்சி செய்ய வேண்டும். விசேஷ பஞ்சப்படி சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்த இன்னமும் தாங்கள் தயாராக இருப்பதாக ஜ.தொ.கா தலைவர் ஜனாப் அஸீஸ் தெரிவித்திருக்கிறார். நிலைமை மோசமாகாமல் தடுப்பதற்கு இது நல்ல சந்தர்ப்பம். தோட்ட முதலாளிமாரும், வேலைநிறுத்தத்தில் சம்பந்தப்படாத இதர தொழிலாளர் ஸ்தாபனங்களும், அரசாங்கமும் இதைப்பயன்படுத்தி வேலைநிறுத்தம் நீடிக்காமலும் பரவாமலும் தடுக்க முயற்சிசெய்ய வேண்டும். நாட்டின் நலனைக் கருதியும் அரசியல் நோக்கத்துக்கு வேலைநிறுத்தங்களைப் பயன்படுத்த விரும்புவோருக்கு இடம் கொடாமலும் இருப்பதற்கும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டியது அவசியம். இதேசமயம் வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர், தம்மையும் தமது நியாயமான கோரிக்கைகளையும் அரசியலுக்குப் பயன்படுத்த முனைந்து அனுதாபம் தெரிவிக்க முன்வருபவர்கள் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். வேலைநிறுத்தங்கள் அரசியலுக்குப் பயன்படுத்தப் பட்டால் தொழிலாளர் அதைக் கைவிட்டு உடனடியாக வேலைக்குத் திரும்புவதே விவேகம்.

# "ஆபாச ஒழிப்பு இயக்கம் ஆரம்பிக்கப்படவேண்டும்"

## கொழும்பில் நடந்த சர்வோதய கருத்தரங்கில் யோசனை

கொழும்பு, புதன்

''சிரமதானத்தின் மூலம் சமூக உறவையும் பொருளாதார புனர் அமைப்பையும் ஏற்படுத்துவதே இந்த நாட்டில் செய்யவேண்டிய மிகப்பெரிய பணியாகும். நமது நாட்டில் சமூக உறவு பலதுறைகளில் சீர்குலைந்துள்ளது. பொல்லாத சுயநலப் பற்றினால் சாதி, மத, இன பேத உணர்ச்சிகள் வளர்க்கப்பட்டுள்ளன. இவற்றை ஒழிப்பதற்கு சிரமதான இயக்கமே சிறந்த மார்க்கமாகும்'' என அகில இலங்கை காந்தி சேவா சங்க பொதுச்செயலாளர் திரு. சோ. க. தம்பிப்பிள்ளை பண்டாரநாயக்க மாவத்தையில் உள்ள சிறி கணபதிவித்தியாலயத்தில் சிரமதான கருத்தரங்கை தலைமை வகித்து ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கத்தின் போது திரு. எஸ். ஜே. சந்தியாப்பிள்ளை பேசியதாவது:-

''சமூகப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு கம்யூனிசவழி, சர்வோதயவழி என இரண்டு உள்ளது. இதில் கம்யூனிச வழி எங்கள் நாட்டுக்கு பொருந்தா ஒன்று என ஒதுக்கிவிட்டோம் இப்போது நாங்கள் சர்வோதய வழிமுறையில் சமூகப் பிரச்னைகளை தீர்க்கவேண்டி உள்ளது சர்வோதயவழி மூலம் எங்கள் வாழ்நாளில் சமூகப்பிரச்னைகளைத் தீர்க்க முடியுமா? நாங்கள் செய்யும் முயற்சி வேகமடையாதா? என்பன சிந்திக்கவேண்டும் ''

திரு. எஸ். ராஜேந்திரன் பேசியதாவது:

''சமூகப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு சர்வோதவழி முறைகளேசிறந்த மார்க்கம் என்பதை உலகில் எல்லோரும் ஒத்துக்கொள்ளுகின்றேரப். ஆனால் எங்கள் சிவியத்தில் பிரச்னைகளை தீர்த்து முடிப்போம் என்று எண்ணக்கூடாது. அந்தவழியை நோக்கி நாம்முன்னேறுவோம். இயன்ற பணிகளைச் செய்தால் அது நமக்கும் சமூகத்துக்கும் பயன்படும். இதில் ஒருஅம்சம்தான் சிரமதானமாகும். சமுதாய முன்னேற்றத்துக்கு பல தடைகள் இண்டு இவற்றை நாம் தாம் தடுத்து ஊடறுத்துச் செல்லவேண்டும்'

திரு. ஆ. கணபதிப்பிள்ளை பேசியபின், திரு. சி. க. வேலாயுதபிள்ளை பேசியதாவது:-

மனித நாகரீகத்தை பண்பைச்சீரழிக்கும் சினிமாத்துறை, பத்திரிகைகள், அரசியல் வாதிகள். இந்தமூன்று பேராபத்தில் இருந்தும் மக்களை- சாதாரண பாமரர்களை- இளைஞர்களை மீட்க வேண்டிய பெரிய பொறுப்பு சமூக சேவையாளர்களுக்கு உண்டு என்பதை மறக்கக்கூடாது.

### ஆபாச விளம்பர ஒழிப்பு

நல்ல பண்பை- போதனைகளை செய்யவேண்டிய சினிமாத்துறை கேவலம் நவீன முறைகளின்பெயரில் ஆபாசமான காட்சிகளைக் கொண்டதாய் மக்களின் உள்ளங்களைக்கெடுத்து ஒழுக்கத்தை சீரழிக்கின்றது. ஆகையால் சமூக சேவகர்கள் ஒரு புரட்சி செய்யவேண்டியுள்ளது ஆபாச சினிமா விளம்பரங்களை பொதுஇடங்களில் நீக்கவேண்டும். மறியல் செய்யவேண்டும். பெரிய போராட்டமே நடாத்த வேண்டியுள்ளது

தேசத்து மக்களின் அறிவை வளர்த்து நல்ல செய்திகளைப்பரப்பிபிரசுரம் செய்ய வேண்டியபத்திரிகைகள் பெண் இனத்தையே பேரவமானம்செய்து ஆபாசமான படங்களையும் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டத்தக்க கருத்துக்களை போட்டி போட்டு பிரசுரித்து வருகின்றன. சினிமாவும் சில பத்திரிகைளும் சேர்ந்து இந்தநாட்டை சீரழிக்கின்றன. மேலும் அரசியல்வாதிகள் தங்கள் சுயநலத்துக்காக மக்களின் மனநிலையைக் குழப்பி போட்டி பொறாமை முதலியவற்றைக் கட்சிகள் அழைத்து வளர்க்கிறார்கள். இதனால் ஒரு குடும்பத்திலேயே ஒற்றுமையின்மையும் பரஸ்பரம், அன்பும், பண்பும் கேட்டுவிடுகின்றது.

எனவே இந்த மூன்று பெரிய தீமைகளில் இருந்து மக்களை மீட்கவேண்டுமானால் மிகத்தீவிரமாக சர்வோதய புரட்சி செய்ய வேண்டும் சினிமா-பத்திரிகை இவற்றில் இருந்து கலையின்பெயரால் வரும் ஆபாச கருத்துக்களையும் காட்சிகளையும் ஒழிக்க ஒரு ''ஆபாச ஒழிப்பு இயக்கம்'' ஆரம்பிக்கவேண்டும் இதற்காக நாம் பாடுபடுவது ஒரு சிறந்த தேசியப்பணியாகும்.

## கந்தமுருகேசனார் நினைவுவிழா

உடுப்பிட்டி, புதன்

அறிஞர் கந்தமுருகேசனாரின் ஓராண்டு நினைவுவிழா வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு புற்றளைப் பாடசாலையில் பண்டிதர் பொன் கிருஷ்ணபிள்ளையின் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

வித்துவான் க. கார்த்திகேசுவும் வித்துவான் க. வேந்தனாரும் விழாவில் சொற்பொழிவாற்றுவார்கள். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## 'தகுந்த இடம் கொடுக்கவும்'

### மந்திரிக்கு வேண்டுகோள்

கொழும்பு, புதன்

நாட்டில் சுகாதாரசேவை திட்டத்தின்கீழ் ஆயுள்வேத வைத்தியத்திற்கு முதல் இடம் கொடுக்கவேண்டும் என்று அகில இலங்கை ஆயுள்வேத காங்கிரஸ் சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜயவர்த்தனவைக் கேட்டுள்ளது.

ஆயுள்வேத திட்டங்கள் அடங்கிய மகஜரொன்றும் மந்திரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## நாட்டிலும் நகரிலும்

ஹடயோகி எல். எஸ். ராவ் போன 12-ம் திகதி பம்பாயில் தண்ணீர்மீது நடந்து காட்டப்போகிறார் என்று எழுதினேனல்லவா? அவர் அந்த சித்துவித்தையை செய்து காட்டினாரா இல்லையா என்பது தெரியவில்லையே என்று பல அன்பர்கள் கேட்கிறார்கள்

அவருக்கு நேர்ந்த கதியை நினைக்க வருத்தமாயுமிருக்கிறது, மகிழ்ச்சியாகவுமிருக்கிறது.

மஹாராஷ்டிரசட்டசபைத் தலைவர் முதலிய பல பிரமுகர்கள் கூடியிருந்தார்கள். பத்திரிகை நிருபர்கள் குழுமியிருந்தார்கள். படம் பிடிக்கும் காமராக்கள்யோகியாரை நோக்கின. டெலிவிஷன் பிடிப்பவர்களும் இருந்தார்கள். அவர் முதலில் சில யோகசித்துக்களை காண்பித்தார். கண்ணாடித் துண்டுகளை மென்று விழுங்கினார்; ஆணிகளை அப்படியே வாய்க்குள் போட்டு தண்ணீரோடு கலந்து உடலுக்குட் செலுத்தினார். கொஞ்சம் நச்சுத் திராவகத்தையும் குடித்தார். பிறகு அக்கினிப் பிரவேசம் செய்தார்,

நாலடி ஆழத்துக்கு தண்ணீர் நிரப்பப்பட்ட ஒரு செயற்கைத் தடாகத்தின் விளிம்பில் நின்றுகொண்டு நிமிர்ந்து நின்று மூச்சுஇழுத்தார். காமராக்கள் பளிச்சிட்டன, யோகியார் தமது வலதுகாலை தண்ணீரில்வைத்தார் அடுத்தகணம் —

**தொப்படியென்று தண்ணீருக்குள் விழுந்துவிட்டார்!!**

பாவம், ஒரு யோகிராஜ் இவ்வளவு கஷ்டப்பட்டுபயின்று முயன்று தோல்வியடைந்துவிட்டாரே என்று வருத்தம் ஒருபுறம்

இறைவன் வகுத்த விதிகளை மீறுவது அவ்வளவுசுலபமல்ல என்பதை அவர் நிரூபித்துக் காட்டியதில் மகிழ்ச்சி ஒருபுறம்.

தண்ணீர்மேல் நடப்பதற்கு தாம் கையாண்டு பயின்றுவந்தயுக்தியையும் அவர் வெளியிட்டிருக்கிறார்.

சாதாரணமாக நாங்கள் மூச்சு இழுக்கும்போது காற்று சுவாசப்பைக்குள் நிரம்புகிறது, தேகத்தில் வேறு எந்த உறுப்புக்குள்ளும் அது போகமாட்டாது. பெருங்குடல், சிறுகுடல் முதலியவற்றிற்குள் சுவாசத்தினால் காற்றை நிரப்பினால் அப்பொழுது நமது தேகம் ஒரு பலூன்போல் ஆகிவிடும். தண்ணீரில் தேகம் சுலபமாக மிதக்கும். நீர்மீதும் நடக்கலாம். சுவாசப்பைக்குள்ளும் உடலுக்குள்ளும் காற்றை நிரப்பும் சூட்சுமத்தைத்தான் யோகிராவ் பயின்று வந்திருக்கின்றாராம்.

ஆனால் அந்த சூட்சுமம் அன்று பலிக்காமல் போய் விட்டது. ஃ ஃ

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டத்தைச்சேர்ந்த ஜி. ஆர் கந்தையா என்ற இளைஞர்ரயில்வே குமாஸ்தா சேவையின் இரண்டாம் பிரிவு (கிளாஸ் 2) சோதனையில் மறுமொழிகள் அனைத்தையும் தமிழிலேயே எழுதி சித்தியடைந்துவிட்டதாக அறிவிக்கிறார். அரசாங்க சட்டப்புத்தகங்கள்பல ஆங்கிலத்தில் இருக்கின்றன. புகையிரத சட்டம் முதலியன தமிழில் இல்லை. அப்படியிருந்தும் தாம் முற்றிலும் தமிழிலேயே எழுதி இந்தச் சோதனையில்வெற்றி பெற்றது ஓர் அலாதியான சாதனை என்றும், இதற்கு முன் வேறெவரும் இப்படிச் செய்ததில்லையென்றும்அவர் கூறுகிறார்.

மிகவும்பாராட்டுதற்குரிய விஷயம்தான். மறுப்பில்லை.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்பு நகரில் காந்திசேவா சங்கத்தின் சிரமதானம்

கொழும்பு, புதன்

''வாலிபர்கள் தங்கள் உழைப்புச் சக்தியை வீணுக்காமல் தங்களுக்கும் சமூகத்துக்கும் பயன்பட உபயோகிப்பதே சிரமதானமாகும். இந்த சிரமதான முறை பண்டைக்காலம் தொட்டு மக்களிடத்தில் இருந்து வந்திருக்கின்றது. முற்காலத்தில் பெரிய பெரிய குளங்களை நீர்ப்பாசனத்துக்காக மக்கள் வைபத்தார்கள். வானளாவிய கோபுரங்களை நிர்மாணித்தார்கள். இவற்றையெல்லாம் சமூகமே திரண்டெழுந்து சிரமானமூலம் அமைத்தது. காலகதியில் மக்கள் சுயநலத்துக்கு ஆளாகி சிரமதான உணர்ச்சியையே கைவிட்டார்கள்.''

என்று முதலியார் செ. சின்னத்தம்பி கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தையில் உள்ள சிவசுப்பிரமணியசுவாமிகோவில் வீதியில் அகில இலங்கை காந்தி சேவாசங்க கொழும்புக்கிளையின் ஆதரவில் சிரமதான இயக்கத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். இங்கு சிரமதானத் தொண்டர்கள் கோவிலுக்கு ஒரு பூந்தோட்டமும் ஸ்ரீ கணபதி வித்தியாலயத்துக்கு விளையாட்டு இடமும் அமைத்து முடித்தார்கள். திரு. சின்னத்தம்பி பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:

மாண்டு மறைந்துபோன சிரமதான உணர்ச்சி மகாத்மா காந்தியடிகள், ஆசார்ய விநோபா ஜீ போன்ற பெரு மக்களால் மீண்டும் புத்துணர்ச்சியூட்டப்படுள்ளது. இந்த நாட்டின் மூலைமுடக்குகள் எல்லாம் எவ்வளவோ சமூகப் பணிகள் தேங்கிக் கிடக்கின்றன. எல்லாம் அரசாங்கமே செய்துதர வேண்டும் என்ற தவருன பாதையை மக்கள் விட்டுவிட வேண்டும். வலிவுள்ள வாலிபர்கள் திரண்டெழ வேண்டும். நமது நாட்டின் தேவையை பூர்த்தி செய்வதற்கு சிரமதானமே சிறந்த வழி. அகில இலங்கை காந்திசேவா சங்கம் இதுவரை கிராமங்களில் சிரமதான இயக்கங்களை ஆரம்பித்தது. இனி மேல் ஏழைகள் வாழும் நகரங்களிலும் சிரமதான இயக்கங்களை ஆரம்பித்துப் பணியாற்றத் தொடங்கியுள்ளது.

கடவுள் வழிபாட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட சிரமதானத்தில் அப்பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்களும் கணபதி வித்தியாலய ஆசிரியர்கள், கோவில் தர்மகர்த்தாக்கள் அனைவரும் பங்குபற்றினார்கள். காலை 7 மணி தொடக்கம் வைபவம் நடைபெற்றது. பூந்தோட்டம் அமைக்கப்பட வேண்டிய நிலம் துப்புரவு செய்யப்பட்டு வேலி அமைக்கப்பட்டு பூங்கன்றுகள் நாட்டப்பட்டன இவற்றுக்கு நாள்தோறும் நீர்ஊற்றி பூந்தோட்டத்தைப்பாதுகாத்து வளர்க்கும் பொறுப்பை கணபதி வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். இதுவரையில் மேற்படி வித்தியாலயத்துக்கு விளையாட்டு இடமே இல்லை. சிரமதானத்தின்மூலம் வெற்று நிலமாக பெரும் காடுபிடித்துக் கிடந்தஇடம் துப்பரவு செய்யப்பட்டு விளையாட்டு நிலமாக்கப்பட்டது சிரமதான தொண்டர்களுக்கான காலை, மதிய உணவுகளை அப்பகுதியில் உள்ள பெருமக்கள் செய்து கொடுத்தார்கள். ஆயுதங்கள் முதலியன சர்வோதய சிரமதான இயக்கத்தினர் கொடுத்து உதவினார்கள். சௌக்கியதான இயக்கத்தினர் முதலுதவிக்கான மருந்துவகைகளைக் கொடுத்து உதவினார்கள். பிற்பகல் 4 மணியுடன் சிரமதான வேலைகள் பூர்த்தியடைந்தன.

ஆசிரியருக்குக் கடிதம்

## இ. போ. ச. அதிகாரிகள் கவனிப்பார்களா?

கடந்த திங்கட்கிழமை (13-6-66) மாலை 5 மணி தொடக்கம் துணுக்காயிலிருந்து மாங்குளம் வரை வழிநெடுக புதூர் நாகதம்பிரான்கோவிலுக்குப்போவதற்குஅடியார்கள் கூட்டம் சென்ற வருடம்போல் யாழ்ப்பாணம் இருந்து துணுக்காயை மாலை 6 மணிக்கு வந்தடையும் பஸ் புதூர் நாகதம்பிரான் கோவிலுக்குப் போய் வர சேவை செய்யுமென்று நம்பி காத்திருந்தார்கள்.

ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து பிற்பகல் 1-30 மணிக்குப் புறப்பட்டு மாலை 6 மணிக்கு வந்தடைய வேண்டிய பஸ் இரவு 11 மணிக்கு இங்கு வந்து சேர்ந்தது. பஸ்ஸுக்காக காத்திருந்த அடியார் இரவு 9 மணிக்கு ஏமாற்றத்துடன் வீடு திரும்பிவிட்டார்கள். ஆனால் நானும் வேறு சிலரும் பஸ் வரும் வரை காத்திருந்து மேற்படி பஸ் கொண்டக்டரை பஸ் புதூருக்கு போகுமா என்று வினவியபோது பஸ் கொண்டக்டர் மாங்குளம் வரை தான் பஸ் செல்லும். இ. போ. ச. மேலதிகாரிகள் மாங்குளத்தில் நிற்பார்கள் அவர்கள் கட்டளைப்படி தான் பஸ் போகும் என்று சொன்னார்.

பஸ் மாங்குளத்தை அடைந்தபோது அங்கு எந்த மேலதிகாரியும் இருக்கவில்லை. அப்போது நடுநிசி 12 மணி பஸ்ஸில் இருந்த எங்களுக்கு மேற்கொண்டு புதூருக்குச் செல்ல வாகனவசதி எதுவும் இருக்கவில்லை. பல அடியார்களின் வேண்டுகோளுக்கு இணங்கி கருணை கூர்ந்த பஸ் கொண்டக்டர் அதே பஸ்ஸை புதூருக்கு கொண்டுசென்றார்.

துணுக்காய் யாழ்ப்பாண பஸ் சேவையில் நேரம் பிந்தி வருவது இது முதல் தடவையல்ல. முன்பு யாழ்ப்பாணமிருந்து 2 மணிக்குப் புறப்பட்ட பஸ்ஸை பலரின் முறையீடு காரணமாக 1-30 ஆக நேரசூசியை மாற்றியமைத்தார்கள். ஆனால் இதனால் எவ்வித பலனும் பிரயாணிகளுக்கு ஏற்படவில்லை.

பஸ் சேவையை சீர்திருத்திப் பொதுமக்களுக்கு வசதி செய்து தருவதற்கு இ. போ. ச. அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களா?

சு. சந்திரசேகரம்
கி. மு. ச. காரியதரிசி
துணுக்காய்.

## சர்வேயர் கிரகம்

கேப்கென்னடி, ஜூன் 15

2 வாரங்களுக்கு முன் சந்திரனுக்கு அனுப்பபட்ட அமெரிக்க சர்வேயர் கிரகம் தனது காமராக்களை இப்போது மூடிக்கொண்டு விட்டது, கடுங் குளிரையும், கடும் வெப்பத்தையும் தாங்கிக்கொண்டு 10000 படங்களுக்குமேல் அது பூமிக்கனுப்பியிருக்கிறதுஎன விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இன்னும் சில நாட்களில் தொடர்ந்து அது படங்களை அனுப்பும் என எ[illegible] தாயும் அவர்கள் [illegible]

## கைத்தறித் துணிக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களிலுள்ள ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தை விட இரண்டு மடங்குக்கு மேல் தனிப்பட்ட நெசவு நிலையங்களில் வேலைபார்க்கும் ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்றது.

இவ்விதம் இந்த நெசவு நிலையங்கள் மூடப்பட்டால் இவற்றில் வேலைபார்க்கும் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட இளம் ஆண், பெண் ஊழியர்கள் வேலையிழக்கவேண்டி நேரிடும்.

கைத்தறித் துணிகளுக்கு விலைக்கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டால் இப்போதிருக்கும் அதன் தரம் குறைவதற்கு வழிவகுத்துவிடும். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் துணிகளுடன் போட்டிபோடக்கூடியவகையில் இக்கைத்தறித்துணிகளைத் தயாரிப்பதே இத்துறையில் ஈடுபட்டவர்களின் நோக்கம். இதனால் உள்ளூரிலுள்ளவர்கள் அதிக விலைகொடுத்து இறக்குமதித் துணிகளை வாங்கவேண்டிய அவசியமிருக்காது. அதாவது அன்னிய செலாவணியை மிச்சப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிக்கு உதவுவதில் கைத்தொழில் அதிபர்கள் முன்நிற்கிறார்கள் என்பதை எடுத்துக்கூற விரும்புகின்றோம்.''

## முதல் எதிரிக்கு . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கேட் கே. வி. எஸ். சண்முகநாதனின், உதவியுடனும், புறக்டர் எஸ். கந்தசாமியின் அனுசரணையுடனும் ஆஜரானார். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புறக்டர் எஸ். அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டிருந்தார்.

நேற்றுக்காலை நீதிமன்றம் கூடியதும், எதிரி சார்பில் ஆஜரான அட்வகேட் ஏ. சம்பந்தன் தொகுப்புரையை நிகழ்த்தினார். அதன்பின் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஜி. பீ. எஸ். டி. சில்வா தொகுப்புரையை நிகழ்த்தினார். அதன்பின் நீதியரசர் தமது உரையை நிகழ்த்தினார். நேற்று நண்பகல் 1 மணிக்கு நீதியரசர் தமது உரையை முடித்துக் கொண்டார்.

ஜூரி சபையினர் தனிமையில் கூடி சுமார் 75 நிமிடங்கள் மந்திராலோசனைசெய்த பின் தங்கள் முடிவைத் தெரிவித்தனர்,

முதலாவது குற்றச்சாட்டில் அதாவது சுப்பிரமணியத்தைக் கொலைசெய்த குற்றச்சாட்டில், ஜூரி சபையினர் ஆறு, ஒன்றுகப்பிரிந்து, 1-ம் எதிரி சடுதியாக ஏற்பட்ட சண்டையில் கைமோசக்கொலை புரிந்ததாகவும், 2-ம் எதிரி பயங்கரமான ஆயுதத்தால், படுகாயம் விளைவித்ததாகவும்தெரிவித்தனர்.

இரண்டாவதுகுற்றச்சாட்டில் அதாவது, சித்திரனைக் கொலைசெய்த குற்றச்சாட்டில் ஜூரிசபையினர் ஏகமனதாக, 1-ம், 2-ம் எதிரிகள்எக்குற்றத்திற்கும் குற்றவாளிகளல்லவெனத் தெரிவித்தனர்.

இரு எதிரிகளும் முன்பு குற்றப்படவில்லையென எதிரிகளின் வழக்கறிஞர் நீதியரசரிடம் தெரிவித்தார்.

நீதியரசர் தீர்ப்பளிக்கும்போது குறிப்பிட்டதாவது:

இதுஒரு பெரிய பாரதூரமான செய்கை. இது நிறுத்தப்படவேண்டும். 1-வது எதிரி சுப்பிரமணியத்தை அவர் சண்டையில் தலையிட்டபோது குத்தியிருக்கிறார். 1-ம் எதிரி குத்தியபின் 2-ம்எதிரி கோடாரியால் வெட்டினார். கீழே விழுந்த சுப்பிரமணியத்தை இரண்டாவது தடவையாக [illegible]

[illegible] ழிய சிறைத்தண்டனை விதிக்கிறேன்.

2-ம் எதிரி, உதவியில்லாமல் இருந்த சுப்பிரமணியத்தை கோடாரியால் தாக்கியிருக்கிறார். இது ஒரு சண்டித்தனமான செயல். இது நிறுத்தப்படவேண்டும், 2-ம் எதிரிக்கு 7 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கிறேன்.

ஜூரி சபையினர் கருணை காட்டி தீர்ப்பளித்திருக்கின்றனர்.''

அசைஸ் விசாரணை மீண்டும் இம்மாதம் 18-ம் திகதி காலை ஆரம்பமாகும்.

# 'ராஜரத்தினவின் கீழ் தமிழ் ராஜ்யம்

## கல்முனைமகாநாட்டுக்கு பிரதமர்போகமாட்டார்'

### எதிர்க்கட்சி சிங்களத் தினசரிகள் சாடு!

திரு. கே. எம். பி. ராஜரத்ன மீன்பிடி கூட்டுஸ்தாபனத்தின் தலைவராக வந்தபின் இது தமிழர்களின் கோட்டையாக மாறியுள்ளது என சிங்கள தினசரிப் பத்திரிகையான ஜனதின ராஜரத்னவின்கீழ் ஒருதமிழ் ராஜ்யம் என்ற தலைப்பின் கீழ் செய்தி ஒன்று வெளியிட்டுள்ளது.

முந்திய தலைவரின் கீழ் உயர்பதவி வகித்தவர்கள் இப்போது தமிழரசுக் கட்சியாரின் பிரதேசங்களான மட்டக்களப்பு போன்ற இடங்களுக்கு மாத்றப்படுவதாகவும் இந்த இடங்களிலிருந்து தமிழ் உத்தியோகஸ்தர்கள் கொழும்புக்கு இடமாற்றும் செய்ய படுவதாகவும் ஜனதின மேலும் தெரிவித்துள்ளது.

### பிரதமர் போக மாட்டாராம்

தமிழரசுக்கட்சி இம்மாதம் 23, 24-ம் திகதிகளில் கல்முனையில் நடத்த விருக்கும் கட்சிமகாநாட்டில் பிரதமர் கலந்து கொள்ளக் கூடாதென யு. என். பி. நிர்வாகக் குழு அவருக்கு ஆலோசனை தெரிவிக்கமுடிவு செய்துள்ளது என சிங்களப் பத்திரிகையான 'ஜனதின' செய்தி வெளியிட்டுள்ளது

பிரதமர் இம்மகாநட்டில் கலந்து கொண்டால் யு.என் பி. க்கு இருக்கும் பொது ஜன ஆதரவு பெரும் பாதிக்கப்பட்டுவிடும் என்று ம நிலைமையை ஒருவாறு சமாளிக்க பிரதமரின் விசேஷ செய்தியை ராஜாங்க மந்திரி மகாநாட்டில் வாசிப்பார் என்றும் 'ஜனதின' மேலும் கூறியுள்ளது.

யு. என். பி. ஒரு பொதுத் தேர்தலுக்கான ஆயத்தங்களைச் செய்து வருவதுபோல் தெரிகிறது' என சிங்களப் பத்திரிகையான 'அத்த' செய்தி வெளியிட்டுள்ளது.

இதுபற்றி அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேர்தலுக்கான நிதிதிரட்டும் நோக்கத்துடன் ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர், ஜெயவர்த்தன தமது இல்லத்தில் வர்த்தக முதலாளிகளுக்கு ஒரு தேநீர்விருந்தளித்தார். இப்போதுள்ள அரசியல் நிலையை மாற்றி பொதுமக்களைத் தனது பக்கத்துக்கு இழுப்பதற்காக யு. என். பி. அதிக செலவு செய்ய வேண்டியிருப்பதால் திரு. ஜெயவர்த்தன இந்த முதலாளிகளிடம் யு. என், பிக்கு தாராளமாக நிதி வழங்குமாறு கேட்டிருந்தார்

இதற்கிடையில் யு. என். பி வாலிபமுன்னணி திரு. டட்லியின் பக்கசார்புள்ளவர்களுக்குப்பதிலாக ஜே. ஆரின் பக்க சார்புள்ளவர்களை வரும் 16, 17-ம் திகதிகளில் நடைபெற இருக்கும் முன்னணியின் மகாநாட்டில் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது. ஜெயவர்த்தன கோஷ்டிக்கு அதிக அதிகாரம் தேடு முகமாக கொலன்னை எம்-பி திரு நந்தா மத்யூ முன்னணியின் காரியதரிசியாக நியமிக்கப்படலாமென அறியப்படுகிறது.

### 'பச்சை சட்டைகளை எரிக்க முயற்சி'

'அத்த' தனது மற்றொரு செய்தியில் குருநாகலையிலுள்ள உகுமியாவைச் சேர்ந்த யு. என். பி. வாலிபமுன்னணியினர், யு. என். பி சமஷ்டி அரசாங்கத்தின் கொள்கைக்கு ஆட்சேபம் தெரிவிக்கு முகமாக உதவி தேசியமய சேவைகள் மந்திரியும் குருநாகலை எம். பி. யுமான திரு டி பி வெலகெதரவின் இல்லத்துக்கு ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்த உத்தேசித்துள்ளனர். இவர்கள் தமது பச்சைச்சட்டைகளை (யு என் பி யிடமிருந்து இவர்கள் பெற்ற ஒரே சீதனம்) திரு வெலகெதரவின் இல்லத்துக்கு முன்னால் எரிப்பதற்கும் எண்ணியுள்ளார்கள். இதுபற்றி கல்விமந்திரியும் முன்னணிகளின் தலைவருமான திரு ஐ எம் ஆர் ஏ இரியகொல்லைக்கும் அறிவித்துள்ளனர். இதற்கு அவர் பதிலளிக்கவில்லையெனத் தெரிவித்துள்ளது.

## சேவைநலம் பாராட்டு

காரைநகர், வியாழன்

நோய் நொடியின்றி நலமுடன் வாழக் கடந்த இரு ஆண்டுகளாகக் காரைநகர் மக்களுக்கு தன்னால் இயன்ற பணியை திரு த மகாதேவன் செய்திருக்கிறார். இவரது சேவை காரைநகர் மக்களால் என்றும் மறக்கமுடியாதது. என்று காரைநகரில் இருந்து ஒத்தோட்டையிலுள்ள கோங்காவலைக்கு சுகாதாரப் பரிசோதகராக இடமாற்றலாகிச் செல்லும் திரு. த. மகாதேவனுக்கு காரைநகர் கிராம சபை ஊழியரினால் அளிக்கப்பட்ட பிரிவுபசாரத்தின் போது திரு யே சரத்தினம் குறிப்பிட்டார். திரு. ஜோன்பிள்ளை மற்றும் பலரும் திரு மகாதேவனின் சேவையைப் பாராட்டிப்பேசினர்.

## வெள்ளத்தில் 7 லட்சம் பேர் அவதி

ஷில்லாங், ஜூன் 15

அஸ்ஸாமிலுள்ள கச்சார் ஜில்லாவில் வெள்ளம் காரணமாக 7 லட்சம் மக்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் சாலை, ரயில், விமானப் போக்குவரத்துக்கள் முற்றுகத் துண்டிக்கப்பட்டன. 80 சத விகித சாகுபடி நிலம் நீரில் ஆழ்ந்துவிட்டது. பல கோடி ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

## 5 பிரதிநிதிகள் செல்வார்கள்

கொழும்பு, புதன்

ஒட்டாவாவில் நடைபெறவிருக்கும் சர்வ-பாராளுமன்ற சங்க மகாநாட்டில் பங்குபற்றுவதற்காக இலங்கையிலிருந்து ஐந்து பிரதிநிதிகள் செல்வார்கள் எனத் தெரியவருகிறது.

சபாநாயகர் சேர் அல்பேர்ட் பீரிஸ் திருமதி ஜே. பி. ஒபயசேகரா திருவாளர்கள் எம் சிவசிதம்பரம், ஏ சி எஸ் ஹமீட் மற்றும் செனட்டர் ஒருவரும் இவர்களுடன் செல்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பறியும் தொடர் நவீனம்

# சோலை வனம்

— கே. ரி. இராசசிங்கம் —

கதவைத் திறந்துவிட்டவனின் கையிலிருந்த விளக்கு மங்கிய ஒளியை உமிழ்ந்தது அவ்வப்பொழுது உபரிமாடத்து சாளரத்துக்கு ஊடே வெளியே அடித்த பேய்க்காற்றின் கோரம் விளக்கின் ஒளியைக் குறைத்து எந்த நேரமும் விளக்கு அவிந்துவிடுமென்பதை உறுதிப்படுத்திக் கொண்டே இருந்தது

இராமு நிற்பதைக் கண்டமறுவன் "என்ன அப்படியே அடிச்சு வார்த்த சிலைமாதிரி நிற்கிறாய்? பயந்திட்டாயா?" என்று கேட்டான்.

"இன்று... இன்று நான் இராப்பொழுதினைக் கழிக்கலாமா...? எனக்கு அடைக்கலம் தருவீர்களா? என்பதைப் பற்றித்தான் யோசிக்கிறேன். வேறொன்றும் இல்லை?" என்றான்.

"நீ யார்?"

"நான் ஒரு வழிப்போக்கன்."

"இது எனது சொந்த பங்களா என்று நினைக்கின்றாய்? நான் இங்கு ஒரு சாதாரண பணியாளனாக இருக்கிறேன். நீ வந்து மாடியில் எஜமான் இருக்கிறார். அவரிடம் கேளப்பா?"

"உனது எஜமானரின் பெயரென்ன?"

"டாக்டர் மோகன். வா மேலே போவோம்" என்று கூறிக்கொண்டே அவன நடக்கத் தொடங்கினான்,

மேல்மாடிக்குச் செல்லும் படிக்கட்டு மரத்தால் ஆனதால் தன்மேல் ஏறும்பொழுது விகாரமாகக் கிறீச் கிறீச்சென்ற ஓசையை எழுப்பியவாறே இருந்தது.

மேல்மாடியை நோக்கிப் படிக்கட்டுகள் முடியுமிடத்தின் வலதுபக்கத்தில் சுத்தமாக வைக்கப்பட்டுள்ள ஓர் உபரிமாடம் இருந்தது. அதில் ஒரு மூலையில் பங்களாவின் உமையாளரான டாக்டர் மோகன் பியானோ மீட்டுக்கொண்டிருந்தார்.

பியானோவை அடுத்து இரண்டு பழைய காலத்துக் கருங்காலிக் கட்டில்கள். அதிலொன்றில் ஒரு சிறிய பெண் குழந்தை ஆழ்ந்த தூக்கத்திலிருந்தாள் மறு கட்டிலில் ஓர் இளம் பெண். பியானோவின் அருகே இருவரும் சென்றவுடன் திடீரென்ப் பியானோவின் ஓசை நின்றது. டாக்டர் மோகன் இராமுவைத் தனது ஆந்தைக் கண்களால் ஆராய்ந்தார். (தொடரும்)

# இல்லங்களில் இரசாயனம்

— இருதயதாஸ் —

(சென்றவாரத்தொடர்ச்சி)

நாம் பொற்றுசியம் காபனேற்றுள்ள சாம்பலை நீருடன் சேர்க்கும்போது அது நீருடன் தாக்கமுற்றுச் சிறிதளவு சோடிய மைதரொட்சைட்டும், காபனிக் அமிலமும் உண்டாகின்றன. சோடிய மைதரொட்சைட்டுத்துரு செழும்போடு கலந்துள்ள எண்ணைப் பசையுடன் தாக்கமுற்று 'சோப்'பையுண்டாக்குகிறது. இச் சிறிதளவு சோப் அழுக்குகளை அகற்றும். மேலும் உண்டான காபனின் அமிலம் உலோகமூல ஒட்சைட்டுக்களாலான செழும்பு. துரு என்பவற்றைத் தாக்கி அகற்றுகின்றன. இதனால் செழும்பு. துரு. எண்ணைப் பசை, அழுக்குகள் அகன்று பாத்திரங்கள் 'பளிச்' சனத் துலங்குகின்றன.

டாக்டர்கள் பேதி குடிக்கக் கொடுக்கும் 'எப்சம்' உப்பு மக்னீசியம் சல்பேற் ஆகும். இந்த உப்பு குடலுறுப்புகளையும், வால்வுகளையும் செயலறச்செய்வதால் குடலிலுள்ள யாவும் உடனேயே அங்கு தங்காது வெளியேறுகின்றன.

நாம் நாளாந்தம் பாவிக்கும் சோப்புகள் யாவும் எங்ஙனம் அழுக்கைப் போக்குகின்றன என்றறிவோம். சோப்பானது சோடியம் உப்புகளின் தியறேற்று, பாமிட்டேற்று என்பவைகளைக் கொண்ட இரசாயனப் பதார்த்தமாகும். இச் சோடியம் பாமிட்டேற்று, தியரேற்று என்பவை நீரோடு தாக்கமுற்று நுரை குமிழிகளான ஒரு சேர்வையை உண்டாக்கும். இந் நுரை குமிழிகளுள் காற்றும் அடைபட்டுள்ளது. இந் நுரை அழுக்குத் துணியின் நுண்ணிய இழைகளினூடு செல்லும்போது அழுக்குகளையும் தம்முடன் இழுத்துச் செல்கின்றன இதனால் அழுக்கு அகன்று துணி பிரகாசமாகிறது. நாம் சோப் உபயோகிக்கும்போது சிறிதளவு எலுமிச்சம்பழச்சாறு ஒட்சகாலிக் அமிலப் பளிங்குப்பு என்பவற்றையும் சிறிது கலந்து பாவித்தால் அதிகமான நுரையூடகம் விரைவில் உண்டாகி அழுக்கை அகற்றுகின்றது.

(முற்றும்)

# இதோ வர்ண டெலிவிஷன்!

— ஆனந்தன் —

இப்பொழுது பலர் சந்திரமண்டலப்பிரயாணம் சாத்தியமாகுமா என்று சந்தேகிக்கிறார்கள். இது போலவே டெலிவிஷன் வந்தபோதும் கலர் டெலிவிஷன் சாத்தியமாகுமா? எனப்பலர் சந்தேகப்பட்டனர். ஆயினும் இப்போது கலரிலும் (வர்ணத்திலும்) டெலிவிஷன் காட்டுவதில் வெற்றி கிடைத்துவிட்டது பத்திரிகைகளில் மூவர்ணப் படங்கள் அச்சடிப்பது போலத்தான் இந்தக்கலர் டெலிவிஷனும்!

இயற்கையில் பல வர்ணங்கள் உள்ளன. ஆனால் அவற்றின் அடிப்படையான நிறங்கள் நீலம், சிவப்பு, மஞ்சள் என்ற மூவர்ணங்களுமாகும். இவற்றைக்கலப்பதால் பலவித நிறங்கள் உண்டாகும். நீலமும், மஞ்சளும் கலந்தால் பச்சை நிறம் உண்டவதுதான் உங்களுக்குத்தெரியுமே!

சாதாரண டெலிவிஷன் படப்பிடிப்பிற்கு ஒரு கமரா மாத்திரம் உபயோகப்படுகிறது. ஆனால் கலர் டெலிவிஷன் படப்பிடிப்பிற்கோ, மூன்று கமராக்கள் தேவை! ஒரு கமரா நீலநிறத்தையும் மற்றது சிவப்பு நிறத்தையும், இன்னொன்று மஞ்சள் நிறத்தையும் படமெடுக்கும். ஒவ்வொரு நிறத்துக்கும் வித்தியாசமான மின்னலைகளை ஏற்படுத்தக்கூடியவை கலர் டெலிவிஷன் கமராக்கள்! இதன் மூலம் வர்ணப் படங்கள் எடுக்கப்படுகின்றன.

(அடுத்த இதழில் முடியும்)

## மாணவர் மலர்

புதிய அம்சம்

## சரித்திரம் பேசுகிறது

விரைவில் வெளியாகிறது

கல்லூரி மாணவர்களுக்குப் பெரிதும் பயன் தரக்கூடிய வகையில் "சரித்திரம் பேசுகிறது" எனும் புதிய தொடர் பகுதி இங்கு விரைவில் வெளியாகவிருக்கிறது.

இப்புதிய அம்சம் பல விஞ்ஞானத் தகவல்களையும் பழையகால ஆட்சி முறைகளையும் மற்றும் சரித்திர சம்பவங்களையும் கொண்டிருக்கும். மேலும் விபரங்களுக்கு மாணவர் மலரைத் தொடர்ந்து பாருங்கள்.

## அறிவுச் செல்வம்

(1) ஐ. நா. சபை எத்தனையாம் ஆண்டு ஸ்தாபிக்கப் பட்டது?

(2) இந்தியாவின் முதலாவது இராணுவத் தளபதி யார்?

(3) 'ஒட்சிசன்' வாயுவிற்கு ஒட்சிசன் என்ற பெயரைக் கொடுத்தவர் யார்?

(4) சீனப் பெருஞ்சுவர் யாரால் கட்டப்பட்டது?

(5) மின்ஓட்டத்தின் விளைவுகளைக் கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?

(6) மின்கலங்களை முதன் முதற் செய்தவர் யார்?

(7) மின்விளக்கை முதன் முதற் செய்தவர் யார்?

### விடைகள்

(1) 1945 அக்டோபர் 24.
(2) ஜெனரல் கரியப்பா.
(3) இலவோசியர்.
(4) ரிசின்-ஷி என்பவரால்.
(5) மைக்கல் பரடே.
(6) உவோற்று என்பவர்
(7) தோமஸ் அல்வா எடிசன்.

தொகுப்பு:
கு. பற்குணராஜா,
சாவகச்சேரி.

## ஷகான் துப்பறிகிறார்

கோவிந்தன் வீட்டில் இருக்கவில்லை என்பதை துப்பறிவாளர் ஷகான் நம்பவில்லை. இதற்குக் காரணம் இறந்துபோன பரந்தாமனின் பெயருக்கு வந்த கடிதத்தில் ஒட்டப்பட்டிருந்த முத்திரையில் நேற்று முன் தினம் அதாவது இறந்துபோன தினத்துக்கு முதல் நாளுக்குரிய 'சீல்' (கொழும்பு என்று) குத்தப்பட்டிருந்ததுதான். கோவிந்தன் கூறியதுபோல அக்கடிதம் இரு நாட்களுக்கு முன்னர் வந்திருக்க முடியாது. 'சீல்' குத்தப்பட்ட திகதிக்கு அடுத்த தினம்தான் அக்கடிதம் விநியோகிக்கப்பட்டிருக்க முடியும். கோவிந்தன் ஏன் பொய் சொல்ல வேண்டும்? இதன் விளைவாகத்தான் ஷகான் அவனைக் கைதுசெய்யச் சொன்னார்.

பலர் இதில் கலந்து கொண்ட போதிலும் விரல் விட்டு எண்ணக்கூடியசிலரே சரியாகப் புரிந்து எழுதியிருந்தனர். அவர்களுக்கு சி. ஐ. டி. ஷகான் பாராட்டுகள் கூறுகின்றார். பெயர்கள் வருமாறு:

ஆர் ஈ ராஜநாயகம், சுன்ணாகம்; செல்வி ஜி சண்முகம், உடுப்பிட்டி; பொ வெற்றிவேல், பருத்தித்துறை; எஸ் பி குணதாசன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி; நா நகுலேந்திரன், நுகவொடை; அ கனகசூரியர், ஊரெழுமேற்கு.

மூன்று பரிசுகள் ..... முடிவுதிகதி: 19-6-66

## 'கிரிக்கெட்' டெஸ்ட் போட்டிகளில் நாட்டமுண்டா?

### இதோ உங்களுக்கு ஒரு பரீட்சை!

சந்தர்ப்பங்களுக்கேற்றவகையில் உங்களை 'மாணவர் மலர்' பல தடவைகளில் மகிழ்வித்துவந்திருக்கிறது. இவ்வரிசையில் பல போட்டிகளும் நடைபெற்றிருக்கின்றன, இம்முறை உங்களை கிரிக்கெட் உலகுக்கு 'அவதானி' அழைத்துச் செல்கின்றார்.

இன்று பதினாறும் திகதி லண்ளில் லார்ட்ஸில் இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டிக்கும் மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆரம்பமாகிறது. இப்போட்டி ஐந்து நாட்கள் வரை நடைபெறும். நீங்கள் செய்யவேண்டியதெல்லாம்பின்வரும் கேள்விகளுக்குருரியவிடைகளை யூகித்து சரியாக எழுதவேண்டியதுதான், உங்களின் பலருக்கு கிரிக்கெட்டில் ஆர்வம் இருக்கும். பலர் இக்கிரிக்கெட் பற்றிய வானொலி வர்ணனைகளை பட்டினி இருந்துகூட கேட்டுக்கொண்டிருப்பார்கள், எங்கே... உங்கள் கைவரிசையை இதில் காட்டுங்கள் பார்ப்போம்! இதோ ஐந்து கேள்விகள்!

★ இரண்டாவது கிரிக்கெட் டெஸ்டின் முடிவு என்ன?

○ இரு கோஷ்டி காப்டன்களும் ஐம்பதுக்கு அதிகமான ஓட்டங்கள் எடுப்பார்களா?

★ இரண்டு கோஷ்டிகளிலும் கடைசியாக (பதினோராவதாக) விளையாடும் துடுப்படி வீரர்கள் இருபத்தைந்து ஓட்டங்களுக்குமேல் எடுப்பார்களா?

★ இரண்டாவது கிரிக்கெட் டெஸ்டில் நூற்றுக்கும் அதிகமானஓட்டங்களை எடுப்பவர்கள் யார்? பெயர்களைத் தருக.

○ யார் அதிகமான (கூடுதலான) விக்கட்டுகளை வீழ்த்துவார். அவரின் பெயரைக் குறிப்பிடவும்.

விடைகளை தபாலட்டையில் எழுதி 'அவதானி', மாணவர் மலர் ஈழநாடு, தபால்பெட்டி: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள். 19-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு பின்னர் வரும் விடைகள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

### பரிசுகள்

இப்போட்டியில் மூன்று கேள்விகளுக்கும் சரியான விடைகள் எழுதி முதல் மூன்று பரிசுகள் பெறும் அதிர்ஷடசாலிகளுக்கு "ஈழநாடு" பத்திரிகை இலவசமாக அனுப்பி வைக்கப்படும். முதல் பரிசு பெறும் அதிச்ஷ்டசாலிக்கு மூன்று மாத காலத்துக்கும் இரண்டாம் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிக்கு இரண்டு மாத காலத்துக்கும் மூன்றும் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிக்கு ஒரு மாதத்துக்கும் இலவசமாக "ஈழநாடு" பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். உங்களின் விடைகளையும் விலாசத்தையும் தெளிவாக எழுத வேண்டியது முக்கியமாகும். சரியான விடைகள் எழுதி அதிர்ஷ்டப் பரிசுகள் பெறுதவர்களின் பெயர்கள் மாணவர் மலரில் வெளியாகும்.

## சரித்திரத்துக்கு முந்திய பிராணிகள் அழிந்ததெப்படி?

— றிச்சர்ட் வில்ம் —

சரித்திரத்திற்கு முந்திய காலப்பிராணிகள் சந்ததிகளே இல்லாமல் அடியோடு அழிந்துபோனது ஏன் என்பதற்குப் பல ஆராய்ச்சியாளர்கள் பல காரணங்களைக் கூறுகிறார்கள் ஆனால் கனடாவில் ஆராய்ச்சிசெய்து வரும் ஜெர்மன் நிபுணர் ஒருவர் இவைகள் அழிந்ததற்கான சரியான காரணத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். மூளைக்கும் இருதயத்துக்கும் அதிகதூரம்இல்லை என்றால் அப்பிரயாணிகளின் சந்ததிகள் இன்றும் இருந்திருக்கும். சில திமிங்கலங்கள் அப்படியிருந்ததினால் தான் அவைகளின் சந்ததி இன்னும் இருந்துவருகிறது. இப்படி இல்லாத பிராணிகள் அடியோடு அழிந்துவிட்டன.

சரித்திரகாலத்திற்கு முன்பு பிரம்மாண்டமான உருவமுள்ள பல பிராணிகள் இவ்வுலகில் வசித்து வந்தன. அவைகளின் சந்திகள் இன்று இல்லை. அவைகள் அக்காலத்தில் இருந்தனவென்பதற்கு அடையாளமாக அவைகளின் எலும்புகள் சில இடங்களில் கிடைத்துள்ளன. இவை ஏன் அழிந்தன? சிறுகச்சிறுக காலப்போக்கில் அழிந்தனவா? அல்லது ஒரே சமயத்தில் மாண்டுமடிந்தனவா? இவைகள் எல்லாம் ஆராய்ச்சிக்குரிய விஷயம். இவைசம்பந்தமாக இப்போது ஆராச்சியாளர்கள் பலவிதக் கருத்துக்களை வெளியிடுகிறார்

அப்பிராணிகளின் மூளைக்கும் இருதயத்திற்குமுள்ள தூரம் மிகவும் அதிகமாக இருந்தது என்றும் காலப்போக்கில் ஏற்பட்ட மாறுதல்களில் இவ்வளவு தூரம் உறுப்புகளிடையே இருப்பது சரிப்பட்டு வராததால் இப்பிராணிகள் மாண்டுமடிய நேர்ந்திருக்வேண்டுமென்றும் பேராசிரியர் எச். இ. கெய்சர் கருதுகிறார்.

(அடுத்த இதழில் முடியும்)

## திட்டத்தை பாதியாது

புதுடில்லி ஜூன் 15

ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டதனால் 5000 கோடி ரூபாய் பெறுமதியான ஐந்தாண்டு பாதுகாப்புத் திட்டம் பாதிக்கப்படமாட்டாதென இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட்: இனிங்ஸ் தோல்வியை இங்கிலாந்து தவிர்க்குமா?

# லார்ட்ஸ் டெஸ்ட் இன்று ஆரம்பம்

### இங்கிலாந்தின் மாற்றங்கள் ஒருதிருப்பத்தை ஏற்படுத்தலாம்

— ''அவதானி'' —

இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியாவுக்குமிடையே இன்று லார்ட்ஸில் ஆரம்பமாகும் இரண்டாவது கிரிக்கெட் 'டெஸ்டை'ப் பற்றி தீர்க்கமாக எதுவும் சொல்ல முடியாவிட்டாலும் முடிவை சிறிதளவு கணிக்கக் கூடியதாகவிருக்கிறது. அதாவது இன்று ஆரம்பமாகும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து கோஷ்டி வெற்றிபெறும் வாய்ப்பை ஓரளவு இழந்தாலும் இனிங்ஸ் தோல்வி அதற்குக் கிடைக்காது என்பதுதான்.

இன்று யார் முதலில் துடுப்பெடுத்தாடுவார்கள்? வெற்றியின் இரகசியம் இதிலும் தங்கியிருக்கிறது.

மான்செஸ்டரில் இம்மாத ஆரம்பத்தில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து கோஷ்டி இன்னிங்ஸால் தோற்கடிக்கப்பட்டது கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

**இங்கிலாந்து கோஷ்டியின் மாற்றம்**

இன்று ஆரம்பமாகும் இக்கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து கோஷ்டியில் செய்யப்பட்டிருக்கும் மாறுதல்கள் இந்த டெஸ்டின் 'விதி'யை ஓரளவு மதிப்பிடக்கூடியதாக இருக்கிறது. முதலாவது கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து கோஷ்டிக்குத் தலைமை (காப்டன்) வகித்த மைக் ஸ்மித் இரண்டாம் டெஸ்டில்இடம்பெறவில்லை. இவருடன் மேலும் மூவருக்கும் 'கல்தா' கிடைத்திருக்கிறது. இதற்குப் பதிலாக வேறு நால்வர் இடம் பெற்றிருக்கின்றனர். இந்த மாற்றம் ஓரளவு வரவேற்கத்தக்கதென்றாலும் இதனை புத்திசாலித்தனமான ஒரு நடவடிக்கை என்று முடிவு கட்டிவிடக்கூடாது.

**இவர்கள் தகுதியற்றவர்களா?**

முதல் டெஸ்டில் இங்கிலாந்து கோஷ்டியில் விளையாடிய டேவிட் பிறவுணையும் எறிக்றஸலையும் இரண்டாவது டெஸ்டிலிருந்து நீக்கியிருக்கின்றனர். இதற்கான காரணங்கள் எமக்குப் புதிராகத் தானிருக்கின்றன. முதல் டெஸ்டில் இவர்களின் விளையாட்டு தகுதி குறைந்தாக இருந்ததென்று கூறமுடியாது. பிறவுனின் அபாரமான பந்துவீச்சுக்கள் முதல் டெஸ்டில் பல விக்கட்டுகளைப் ''பதம்'' பார்க்கத்தவறிவிட்டன என்றாலும் கடந்த ஒரு வருடகாலத்தில் இங்கிலாந்தில் நடைபெற்ற பல்வேறு கிரிக்கெட் போட்டிகளில்லும்இவர்காட்டிய சாதனைகளை நாம் பாராட்டாமலிருக்க முடியாது. இவரது நீக்கம்ஒரு அனாவசியமானதென்றே கருதலாம்.

றஸல் ஏன் நீக்கப்பட்டார்? முதல் கிரிக்கெட் டெஸ்டில் இவரின் துடுப்பெடுத்தாட்டம் சோபிக்கவில்லையா? இதுவும் ஒரு மர்மம் தான்.

மற்ற இருவர்களைப்பொறுத்தமட்டில், மைக்ஸ்மித் வெளியேற்றம் வரவேற்கத்தக்க நடவடிக்கை தான். டேவிட் அலென் நீக்கம்...? இவருக்குப் பதிலாக இரண்டாம் கிரிக்கெட் டெஸ்டில் இடம்பெற்றிருக்கும் றே இல்லிங்வேர்த்... தலைபோய் திருகுவலி வருமா?

குறிப்பாகச் சொல்லப்போனால் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியின் தரம் ஓரளவு உயர்வாகவே இருக்கிறது.

34 வயதுள்ள றே இல்லிங்வேர்த் ஒரு ஆல்ரவுண்டர். மூன்றாவது நபராக விளையாடவிருக்கும் 39 வயதுள்ள கிறேவ்னி மீண்டும் கிரிக்கெட் டெஸ்டுக்குள் திணிக்கப்பட்டிருக்கிறார். இவர் கடைசியாக 1963-ம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற்ற டெஸ்டின்போது கலந்துகொண்டவர். துடுப்பெடுத்தாடுவதில் இவர் சிறப்பு வாய்ந்தவர் முதல் கிரிக்கெட்டெஸ்டில் இடம்பெறத் தவறிய தென்னாபிரிக்க (கறுப்பர்) வீரர் பேஸில் டி' ஒலிவேரா இரண்டாவது டெஸ்டில் இடம்பெற்றுள்ளார்.

**இங்கிலாந்து கோஷ்டி**

இங்கிலாந்து கோஷ்டியின் விபரம்: எம், ஸி. கவுட்ரி (காப்டன்), ஜி. போய்கொட் கே. எவ். பரிங்டன், பி. டி. ஒலிவேரா, டி. டபிள்யு. கிறேவ்னி. கே. ஹிக்ஸ், ஆர்.

(8 ம்பக்கம் பார்க்க)

## சிதம்பராக கல்லூரி விளையாட்டுப் போட்டி

வல்வெட்டித்துறை, செவ்.

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இம்மாதம் 24-ம் திகதி பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. றொபேர்ட்சில்வா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## ஹாக்கிப் போட்டி: யாழ்ப்பாணக் கல்லூரி அருணோதயா வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மாவட்ட கல்லூரி விளையாட்டுச்சங்கத்தின்ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஹாக்கிச் சுற்றுப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்கும் யாழ். மத்தியகல்லூரிக்குமிடையே நடைபெற்ற காரசாரமான போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி யாழ் மத்திய கல்லூரியை மிகவும் சிரமப்பட்டு வெற்றியீட்டியது.

இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரியே முதலாவது கோலைப்போட்டது. மத்தியகல்லூரி வீரர்கள் பலதடவைகள் கோலடிக்கும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டனர். இடைவேளையின்போது மத்தியகல்லூரி ஒருகோலும் போடாத வகையில் யாழ்ப்பாணக் கல்லூரி ஒருகோல் பெற்றிருந்தது. இடைவேளையின் பின்னர் நடைபெற்ற போட்டி மிகவும் விறுவிறுப்பாகக் காணப்பட்டது. இருசாராருமே விட்டுக்கொடுக்காமல் போட்டியிட்டனர். எனினும் யாழ்ப்பாணக் கல்லூரி சிறிது நேரத்தில் மீண்டும் ஒரு கோலைப் போட்டது. இதனைத்தொடர்ந்துமத்திய கல்லூரி தந்த 'பாசிங்' செய்து ஒருகோலைப் போட்டது. இப்போட்டி முடிவில் யாழ்ப்பாணக் கல்லூரி மத்திய கல்லூரியை 2—1 கோலால் வெற்றியீட்டியது.

**அருணோதயா வெற்றி**

இதையடுத்து கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திற்கும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் அருணோதயாக்கல்லூரி வெற்றியீட்டியது.

ஆட்டம் ஆரம்பமாயதிலிருந்து இடைவேளை வரைக்கும் இப்போட்டி மிகவும் ரசிப்பாகவும் தரமாகவும் காணப்பட்டது. இருசாராருடைய போட்டியும் ரசிகர்களுக்கு நல்ல விருந்தாக அமைந்திருந்தது. இடைவேளைவரைக்கும் ஒருகோஷ்டியுமே ஒருகோலும் போடவில்லை. இடைவேளையின் பின்னர் நடைபெற்றபோட்டியில் அருணோதயாக் கல்லூரியின் விளையாட்டில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது. ஆட்டம் ஆரம்பமாகி சிறிதுநேரத்தின் பின் அருணோதயா வலது முன்னணிவீரர் தனக்குக் கிடைத்த கோலடிக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முதலாவதுகோலைப்போட்டார். இதனைத் தொடர்ந்து சூட்டோடுசூடாக போட்டிமுடியும் கடைசிநேரத்தில் இக்கோஷ்டியின் இடது முன்னணிவீரரும் ஒரு கோலைப் போட்டு தமது எண்ணிக்கையை 2 ஆக உயர்த்தினர். இப்போட்டி முடிவில் அருணோதயாக்கல்லூரி கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தை 2—0 கோல்களால் வெற்றியீட்டியது. மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு [illegible] மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.





உத்தம சத்தூட்டும் இரு மடங்கு சக்தி வாய்ந்த

நுவரேலியா

ஸ்டவுட் அருந்துங்கள்

அது தருவது

இரட்டிப்பு உறுதி!

இரட்டிப்பு ஊக்கம்!

இரட்டிப்பு சக்தி!

மதுரமானது

மிருதுவானது

விட்டமின் பீ செறிந்தது




சிலோன் புருவரி லிமிட்டெட், நுவரேலியா.



REGAL—JAFFNA
NOW SHOWING!
Robert Vaughn
in
SPY WITH
MY FACE
(Thrilling Action Film Color)



நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஜெமினி - பத்மினி
நடித்த
மீண்ட சொர்க்கம்



ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
ரஞ்சன் - அஞ்சலிதேவி
நடித்த
நீலமலைத் திருடன்



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடேர்ன் (பதுளை)
தீவொளி (நுவரேலியா)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமூவீஸ்
தெய்வத்தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜவுளிகளை அரசாங்கம் வாங்கத் தயார்

# ஆனால் கட்டுப்பாட்டு விலைக்கே கொடுக்க வேண்டும்

## வர்த்தகர்களுக்கு அறிவிப்பு

கொழும்பு, புதன்

**ஜவுளி வர்த்தகர்கள் தம்மிடமுள்ள பூழு கையிருப்புகளையும் அரசாங்கத்திடம் கட்டுப்பாட்டு விலைக்கு கொடுக்கமுன்வந்தால் அரசாங்கம் அவைகளை முற்றாக வாங்கி கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் மூலம் விற்பனைசெய்யத் தயாராய் இருக்கின்றது.**

**இதுபற்றிய விசேஷ அறிவித்தல் ஒன்றை இன்று வர்த்தக அமைச்சு வெளியிட்டது.**

# கையிருப்புகள்பற்றி வர்த்தகர் கொடுத்துள்ள விபரங்கள்

## பொய் இருந்தால் நடவடிக்கை

கொழும்பு, புதன்

இன்று ஜவுளி வர்த்தகர்கள் தமது கையிருப்புகள் பற்றிய விபரங்களை அறிக்கவேண்டிய கடைசி தினமாகும்.

பல்வேறு மாகாணங்களிலும் உள்ள அரசாங்க அதிபர்கள் வர்த்தகர்கள் தம்மிடம் சமர்ப்பித்துள்ள விபரங்களை பரிசிலனை செய்வார்கள். இந்த விபரங்களுடன் விலைக்கட்டுப்பாடு அதிகாரிகள் வர்த்தகஸ்தாபனங்களுக்குச் சென்று அங்குள்ள கையிருப்புகளையும் அதுபற்றிய விபரங்களையும் ஆராய்வார்கள். வர்த்தகர்கள் தவறான தகவல்கள் கொடுத்திருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அரசாங்க அதிபர்கள் அரசாங்கத்துக்குஅறிவிப்பார்கள். அதன்மேல் அந்த வர்த்தகர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் அமுலுக்குவந்தபின் தமது வர்த்தகத்துக்கு பெரும் இடைஞ்சல்கள் ஏற்பட்டிருப்பதாகவும் ஒழுங்கானமுறையில் வர்த்தகம் செய்யமுடியவில்லையென்றும், அரசாங்கக் கெடுபிடி உத்தரவுகளைச் சரிவர நிறைவேற்றமுடியாமல் இருக்கிறது என்றும், அதனால்தான் மக்கள் கியூ வரிசைகளில் நிற்கவேண்டியேற்படுகின்றதென்றும் வர்த்தகஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துக்கொண்ட முறைப்பாடுகளைத் தொடர்ந்தே அரசாங்கம் இந்த அறிவித்தலை வெளியிட்டிருக்கின்றது

### விசேஷ ரக ஜவுளிகள்

கூட்டுறவுமொத்த ஸ்தாபனத்திடமிருக்கும் சில விசேஷ ரகத் துணிகளை விநியோகிப்பதுபற்றி அரசாங்கம் சில ஏற்பாடுகள் செய்திருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அப்படியான விசேஷரகத் துணிகள் எவை என்பதுபற்றி விளக்கம் எதுவும் கொடுக்கப்படவில்லை.

### கூப்பன் இல்லாமல் . :

பொதுமக்களின் சம்பந்தப்பட்ட விசேஷ நிகழ்ச்சிகளுக்கு கூப்பன்கள் இன்றி சில குறிப்பிட்ட ஜவுளிகளை விற்பனை செய்வதற்கும் அரசாங்கம் முடிவுசெய்திருப்பதாக அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அப்படியான முக்கிய விசேஷ நிகழ்ச்சிகள் என்ன என்பதுபற்றி அறிவிக்கப்படவில்லை.

மரணச்சடங்குகள், திருமணங்கள், கோவில், மதச்சடங்குகள் இந்த விசேஷ நிகழ்ச்சிகளாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

சமீபத்தில் வர்த்தக அமைச்சு ஜவுளி விலைக்கட்டுப்பாட்டு சட்டம் அமுல் சம்பந்தமாக எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து பத்திரிகைகள் தெரிவித்த கண்டனங்கள் சம்பந்தமாகவும் அந்த அறிக்கையில் விளக்கம்தரப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வழக்கு:

# கண்டி மாவட்ட நீதிமன்ற விசாரணைக்கு மூவர் பாரம்

## 4-வது எதிரி விடுதலை

கொழும்பு, புதன்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கடந்த டிசம்பர் மாதம் 11-ந் திகதி நடைபெற்ற கலவரசம்பவங்கள் பற்றிய வழக்கில் ஒருவர்விடுதலைசெய்யப்பட்டார். மூவர் கண்டி மாவட்ட நீதிமன்ற விசாரணைக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு விசாரணை நீதிபதி திரு டக்ளஸ் விஜயரத்தின முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது இந்த வழக்கின் 4-வது எதிரியான திரு ஜயசிங்க என்பவரை நீதவான் விடுதலை செய்தார். என். சண்முகரத்தினம், நெவில் பெரேரா டபிள்யு. பி. விஜயரத்ன ஆகியோர்களை மாவட்ட நீதிமன்றத்தின் விசாரணைக்குப் பாரப்படுத்தித் தீர்ப்பளித்தார்.

சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும், உதவிப் பொலிஸ் அதிபர் ஒருவரை தாக்கியதாகவும் பொலிஸ் சார்ஜன்ட் டி. தங்கராசாவுக்கு காயம் உண்டுபண்ணியதாகவும் பொலிஸ் ஜீப்புக்குச் சேதம் உண்டுபண்ணியதாகவும் பல்கலைக்கழகக்கட்டிடத்துக்குச் சேதம் விளைவித்ததாகவும் இவர்கள்மீது வழக்குத்தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

# இலங்கரத்தின கோஷ்டிக்கு கல்தா கிடைக்கு ?

## பீலிக்ஸ் தலைமையில் எதிர்ப்புக் கோஷ்டி

கொழும்பு, புதன்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மார்க்ஸிய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்துவந்த அக்கட்சியைச் சேர்ந்த ஒரு கோஷ்டியினர் இப்பொழுது தமது எதிர்ப்பு இயக்கத்தை தீவிரமாக்கியுள்ளனர். அக்கோஷ்டியின் தலைவரான திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நாட்டுக்குத் திரும்பிவந்திருப்பது அவர்களுக்கு மேலும் தெம்பைக் கொடுத்துள்ளது

இந்தக் கோஷ்டியினர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் மார்க்சியக்கட்சிகளுக்குமிடையில் கூட்டு ஏற்படுத்துவதற்கு முக்கிய காரணமாகவிருந்த திரு. டி. பி. இலங்கரத்தின கோஷ்டியின் போக்கை வெகுவாகக் கண்டித்துவருகின்றனர்.

இந்தக் கோஷ்டிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் மந்திரிகளாய் இருந்த பலரும் ஆதரவுதாங்கி வருவதாகவும், அவர்களை கட்சியில் இருந்து வெளியேற்றுவதற்கு அடுத்துவரும் கட்சி பொதுமகாநாட்டில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் கருதப்படுகின்றது. மகாநாடு ஆகஸ்ட் 8-ம் திகதி குருணகலையில் நடைபெறவிருக்கின்றது.

திருமதி பண்டாரநாயக்கா யூகோஸ்லேவியா சென்றிருப்பதால் அவர் திரும்பிவரும்வரை திரு. மைத்திரிபாலசேனநாயக்கா ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் தலைவராகவும் பிரதிநிதிகள்சபையில் எதிர்க்கட்சித்தலைவராகவும் தற்காலிகமாக கடமையாற்றி வருகிறார்.

# 20லட்சம் டிக்கட்டுகள் விற்பனையாகியது

கொழும்பு, செவ்.

தேசீய லொத்தர் சபையால் இம்மாதம் 16-ம்திகதி குளியாப்பிட்டியில் இழுக்கப்படவிருக்கும் சுவீப்பின் முதல்பரிசுக்கானடிக்கட்டை கல்வி மந்திரி திரு. ஐ எம். ஆர். ஏ. இரியகொல்லை இழுப்பார்.

முதலாம், இரண்டாம் பரிசுகளுக்குக் கார்கள் கொடுக்கப்படும் இந்த சுவீப்பில் 20 லட்சம் டிக்கட்டுகள் விற்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

# 'உற்பத்தி அதிகரிக்க வேண்டும்'

## --மந்திரி பிலிப்.

கொழும்பு, செவ்வாய்

''கடந்த வருடத்தில் எதிர்பார்த்தளவு உற்பத்தி நமக்குக் கிடைக்கவில்லை. நமதுநாட்டு கைத்தொழில் சாலைகள் முழுத் திறமையுடனும் இயங்காததுதான் இதற்குக் காரணம்.''

கொழும்பு தர்பரபேன் ஹோட்டலில் அளிக்கப்பட்ட விருந்து வைபவமொன்றில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கைத்தொழில்மந்திரி திரு பிலிப் குணவர்த்தன பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

தனிப்பட்ட கைத்தொழில் சாலைகளோ, ஸ்தாபனங்களோ இந்த நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்கக்கூடிய விதத்தில் இயங்கவேண்டுமெனவும், உற்பத்தியை உயர்த்துவதற்காக தம்மாலான சகல திறமைகளையும் செய்யவேண்டுமெனவும் மந்திரி பிலிப் மேலும் கூறினார்.

# வான் விபத்தில் பலருக்கு காயம்

## நல்லூரில் சம்பவம்

யாழ்ப்பபணம், புதன்

யாழ்ப்பாணத்திலிருந்து வல்வெட்டித்துறை நோக்கி பிரயாணிகளை ஏற்றிச்சென்ற வான் ஒன்று நல்லூர் சட்டநாதர் கோவிலடி கல்வியங்காட்டுக்கருகாமையில் பாதையைவிட்டுவிலகிவிபத்துக்குள்ளானது. இதில் பிரயாணம் செய்ததாகக்கருதப்படும் தொண்டமானாறு கிருஷ்ணசாமி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தங்கவேலு, ஆவரங்காலைச் சேர்ந்ததெய்வேந்திரன்சந்தசாமி, இடைக்காடு இராமலிங்கம்நாச்சிமார்கோவிலடி சுப்பிரமணியம், அச்சுவேலி ஞானசிலன், யாழ்ப்பாணம் தம்பிராசா, உரும்பராயைச் சேர்ந்த பொ. வல்லிபுரநாதன் ஆகியோர் யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுசம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிசார்விசாரணைசெய்து வருகின்றனர். (ந நி)

# தற்கொலை?

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள ஒரு ஒழுங்கையில் சிவலிங்கம் ராசையா என்பவர் ஒரு வீட்டின் முற்றத்தில் நேற்று இறந்துகிடக்கக் காணப்பட்டார். இவரது மரணம் குறித்து இன்று காலை விசாரணையும் பிரேத பரிசோதனையும் நடைபெறும்.

குறிப்பிட்ட நபர் தற்கொலை செய்திருக்கலாம் என்றுசந்தேகிக்கப்படுகிறது

# யாருடைய கூப்பன்

யாழ்ப்பாணம், புதன்

சுன்னாகத்தைச் சேர்ந்த திரு. கே. ஈஸ்வரலிங்கம் என்பவரால் நல்லூரில் ஒரு கூப்பன் புத்தகமொன்று கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர்கள் கூப்பனை பெற்றுக் கொள்ளலாம்.

# இத்தாலியபிக்கு பர்மாவில் மரணம்

கொழும்பு, புதன்

இத்தாலியரான பௌத்த பிக்கு லோகாநாததேரோ பர்மாவில் காலமானார். இவர் பலதடவைகள் இலங்கைக்கு விஜயம்செய்துள்ளார். பௌத்த மதத்துறையில் இவர் பெரும் பாண்டித்தியம் பெற்றவராக விளங்கினார்.

# பிரிட்டனில் வாயு மெத்தைக் கண்காட்சி

லண்டன் ஜூன் 15

இம்மாதம் 15-ந் திகதி வரை இங்கிலாந்திலுள்ள பிரவுண்டன் என்னுமிடத்தில் வாயுமெத்தை வாகன (ஹோவர்கிராவ்ட்) கண்காட்சி நடைபெறவிருக்கிறது. முதல் தடவையாக நடைபெறவிருக்கும் இந்த மாபெரும் கண்காட்சிக்கென வெளிநாடுகளிலிருந்து ராணுவ, விமான, கடற்படை அதிகாரிகள் பலர் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

# வெள்ளத்தினால் 6 லட்சம் பாதிப்பு

ஷில்லாங், ஜூன் 14

அஸ்ஸாமில் வெள்ள நிலைமை மோசமாயிருப்பதாயும், இதுவரை 6 லட்சம் பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

# 303 பேர் பலி

பாட்னா, ஜூன் 14

பிகாரில் சூரிய வெப்பத்துக்கு பலியானவர்களின் தொகை 303 ஆக அதிகரித்திருக்கிறது.

# நிக்ருமா . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

19கோடி பவுண் அந்நிய செலாவணியை விட்டுச் சென்றது என்றும் ஆனால் ஜனாதிபதிநிக்ருமாவின்பெருமையை உயர்த்துவதற்கான வழிகளில் இப்பணம் செலவிடப்பட்டது என்றும் அவர் கூறினார். அதே சமயம் 40 கோடி பவுண்தேசியக்கடனை நிக்ருமா ஆட்சி ஏற்படுத்திவிட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

ரஷ்யாவில் பயிற்சிபெற்ற டாக்டர் நிக்ருமாவின் 1506 பேர் கொண்ட சொந்த ராணுவத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு 5 லட்சம் பவுண் செலவிடப்பட்டது என்றும் தொடர்ந்து அவர் கூறினார். (பி டி வி)

# இரண்டாவது . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லிங்வேர்த், ஐ. ஜே. ஜோன்ஸ், வி. ஆர். நைட், ஸி. மில்பேர்ன், ஜே. பாரிக்ஸ், எவ். ஜே. டிட்மஸ்.

### மேற்கிந்திய கோஷ்டி

மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டியில் என்னமாறுதல்கள் நடைபெறுமென்பது நேற்றுமாலைவரை தெரியவில்லை. கடைசி நேரத்தில் யாரும் விலக்கப்பட்டு புதியவர்கள் இன்று இடம்பெற்றாலும் ஆச்சரியமில்லை. எப்படியென்றாலும் நிலைமை தான் அவர்களுக்குச் சாதகமாகவிருக்கிறதே.


## தேவை

காஷியர்

யாழ்ப்பாணம் பஜாரில் உள்ள கடைக்கு காஷியர்-கிளார்க்-சேல்ஸ் மன் தேவை. S. S. C. வகுப்பு வரை படித்தவர் விண்ணப்பிக்கலாம். சம்பளம் 100 முதல் 150, பிணைப்பணம் 1500 முதல் 2000 கட்டவேண்டும். விளம்பர இல 536, ஈழநாடு மே/பா, என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 536

## நோத் சிலோன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் விற்பனைக்கு

நல்ல வியாபாரம் நடைபெறும் இரும்புக் கடை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள நோத் சிலோன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் விற்பனைக்குண்டு. 485


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி. 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org